விலை ரூபா: 8.00 *Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | தை 23 | சனிக்கிழமை (05.02.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 48

புதுப் பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றும்

* விரைவானது * பாதுகாப்பானது * நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு


♦பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
♦வங்கிக் கணக்கு அவசியமில்லை
♦நீடிக்கப்பட்ட சேவை நேரம்
♦365 நாள் சேவை
♦10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM NET

T.P. 021 2227310
021 2227555
021 2227560
FAX 021 2227310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி யாழ்ப்பாணம்





# எமது நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு அரசியல் கட்சிகளின் பங்களிப்பு அவசியம்

## சுதந்திரதின உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு

(நமது நிருபர்)

பேரழிவு ஏற்பட்ட உடனேயே நாட்டை மீளக்கட்டியெழுப்ப எம்முடன் ஒன்றிணையுமாறு சகல அரசியற் கட்சிகளையும் நான் அழைத்திருந்தேன். தேசிய அளவிலும் மாவட்ட ரீதியிலும் நாம் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான திட்டங்களை நாம் உருவாக்கியுள்ளோம். எமக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் சகல அரசியற் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டது இதுவே முதல்தடவை. நாட்டு நலனை முன்னிறுத்தி அனைவரும் ஒன்றிணைந்து எம்மால் சேவையாற்ற முடிந்திருப்பதானது புதிய ஒரு அத்தியாயத்திற்கான ஆரம்பமாகும்.



(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பகுதியெங்கும் நேற்று துக்கதினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் 57 ஆவது சுதந்திர நாள் கொண்டாட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று தமிழர் தாயகப் பகுதியெங்கும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு ஏது நிலைகளை ஏற்படுத்த அரசு தயக்கம் காட்டுவதைக் கண்டித்து சுதந்திர தினம் தமிழர் தாயகப் பகுதியில் கரி நாளாக அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்விற்கான ஏற்பாடுகளை மாவட்ட வெகுஜன அமைப்புக்கள் மேற்கொண்டிருந்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கப் படைகள் இன்று வெளியேறும்

(கொழும்பு)

. சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை புனரமைக்கவென இலங்கை வந்த அமெரிக்கப் படையினரில் எஞ்சியுள்ள படையினர் இன்று அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளனர்.

1600 பேரைக் கொண்ட இந்த படையணியின் முதல் பிரிவினர் கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் தமது கடமையை முடித்துக் கொண்டு கட்டம் கட்டமாக வெளியேறினர்.

எஞ்சிய படையினர் இன்று அமெரிக்கா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-04)

## பொலிசாருக்கு எதிராக

## கருணா குழுவைச் சேர்ந்த இருவர்

## மீளக்குடியமர்த்தக் கோரி

# பொலிசாருக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை கிழக்கு முதலாம் வட்டாரத்திற்குச் செல்லும் பொதுப் பாதையை மக்கள் பாவனைக்கு விடப்படவேண்டும் எனக் கோரி பொலிஸாருக்கு எதிராக நேற்று மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. அப் பாதையை மக்கள் பாவனைக்கு அனுமதிப்பதாக (12 ஆம் பக்கம் பார்க்க)

# கருணா குழுவைச் சேர்ந்த இருவர் பிஸ்டலுடன் பொலிசாரால் கைது

(மட்டக்களப்பு)

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இரண்டு இளைஞர்கள் பிஸ்டலுடன் நேற்று முன்தினம் இரவு பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு ஊறணி பொலிஸ் சோதனைச் சாவடியில் கைதுசெய்யப்பட்ட இந்த இளைஞர்கள் கருணா குழுவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என மட்டக்களப்பு பொலிசார் சந்தேகம் தெரிவித்தனர்.

இதேவேளை மட்டக்களப்பின் எல்லைப்புற கிராமமான வெலிக்கந்தையில் கடந்த 2 ஆம் திகதி துப்பாக்கி ரவைகள் மற்றும் விமான சுடுகலனுக்கான ரவைகள் வைத்திருந்தமை தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

# மீளக்குடியமர்த்தக் கோரி வலிகாம மக்கள் மறியல்

(திருநெல்வேலி)

வலிகாமம் பகுதி மக்கள் நேற்றுக் காலை தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர வேண்டும் எனக் கோரியே காலை 8.30 மணிமுதல் இரண்டு மணிநேரம் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டம் வலிகாமம் பொது அமைப்புக்களின் பிரதிநிதி க. சிவமகராசா தலைமையில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிப் போராளி கிரானில் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகருக்கு வடக்கே கிரான் விஷ்ணு கோயிலுக்கு அருகாமையில் விடுதலைப் புலிப் போராளி ஒருவர் நேற்று நண்பகல் 11.10 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

புலிபாய்ந்த கல்லிலிருந்து மோட்டார் சைக்கிளில் இருவர் சென்றுகொண்டிருந்த சமயம் இச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது நிவேசன் என்று அழைக்கப்படும் சின்னத்துரை தேவதாசன் என்ற போராளியே சாவடைந்துள்ளார்.

இவர்கள் பயணம் செய்துகொண்டிருந்தபோது பதுங்கியிருந்த நபர் ஒருவர் தம்மீது சுட்டதாக மோட்டார் சைக்கிளில் நிவேசனுடன் சென்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேத் தூதுக் குழுவினர் இன்று கிளிநொச்சி விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் வோக்வீக்கனும் இன்று வன்னிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

வன்னி செல்லும் இவர்கள் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

சுனாமிப் பேரழிவில் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கான நிவாரண விநியோகம், வடக்குக் கிழக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த உடன்படிக்கைகளை தொடர்ந்தும் கடைப்பிடிப்பது உட்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் இவர்கள் பேச்சு நடத்தவுள்ளனர்.

(ச-04)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வட-கிழக்கு மக்களுக்கு உரிய முறையில் நிவாரணம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்

## மாவை சேனாதிராஜா எம்.பி வலியுறுத்து

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வரும நிவாரணங்கள் உரியமுறையில் மேற்கொள்ளப்



படவில்லை என்பது தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் தொடர்கின்றன.

அரசாங்கத்தின் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரும் 30 வீதமான பாதிக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமே நிவாரணங்கள் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது விடயம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கருத்துக் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவிக்கையில்,

அரசாங்கம் தான் செய்த தவறுகளை இப்பொழுது பகிரங்கமாகச் சொல்லியிருக்கின்றது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பூரணமாக வழங்கப்படவில்லை என்பதையும் 30 வீதத்தைக் கூடதங்கள் நிறைவேற்றவில்லை என்பதையும் பகிரங்கமாக அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது.

இது அப்பட்டமான அடிப்படை உரிமை மீறல்மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் ஓர் நடவடிக்கையுமாகும்.

இதன் அடிப்படையிலேயே வடக்கு-கிழக்கிற்கு அரசு பாரபட்சமாகவும் பாதகமாகவும் செயற்பட்டு வருவதை பலமுறை குற்றம் சாட்டிவந்திருக்கின்றோம்.

இப்போது இது அப்பட்டமாகத் தெரிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற முறையில் நாம் சர்வதேச சமூகத்திற்கு மீண்டும் இதனை நிருபிக்க வேண்டியுள்ளது.

திடடவட்டமாக எங்களுடைய கருத்து நிவாரணத்தை சமமாகப் பங்கிட்டு வடக்கு-கிழக்கு மக்களுக்கு நிவாரணம உரியமுறையில் வழங்க வேண்டும. உதவிகளை வழங்க வேண்டும் எனக குறிப்பிட்டார். (ந-9)

## "சுனாமி 81" ஐ இனங்காண 9ந் திகதி மரபணுச் சோதனை

(கல்முனை)

கல்முனையில் கடல் அனர்ததத்தில் உயிர்தப்பிய "சுனாமி81" என்ற குழந்தைக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு பொலிஸார் முன்வந்துள்ளார்கள்.

பெற்றோரை உறுதிப்படுத்த மரபணுப் பரிசோதனை மேற் கொள்ள வேண்டும் என்று கல் முனை மஜிஸ்திரேட் பணித்திருந்தார்.

யுனி.:.செப் நிறுவனம் இது தொடர்பாக உதவி வழங்க முன் வந்துள்ளது.

கொழும்பில் உள்ள தனியார் ஆய்வுக் கூடம் ஒன்றில் இந்த பரிசோதனையை நடத்தும் படி நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. குழந்தைக்கு உரிமை கோரும பெற்றோர் இம் மாதம் 9ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் மரபணு பரிசோதனைக்கு வருகை தரவேண்டும் என்று மஜிஸ்திரேட் உத்தரவிட்டுள்ளார். இந்தக் குழந்தையை பலாத் காரமாக தூக்கி செல்ல முற்படடதம் பதியர் குழப்பத்தை ஏற்படுத்த கூடாது எனறும் வைத்தியசாலை உத்தி யோகத்தர்களின் நடவடிக் கைகளை சீர்குலைக்க கூடாது என்றும் மஜிஸ்திரேட் எச்சரித்துள்ளார். (த)


## சிறுவிளம்பரம்

### தேவை

பெண்களுக்கான உள்ளாடை தைப்பதற்குத் தையல் வேலையில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவைப்படுகின்றனர் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தையல் பழகவிரும்புகிறவர்களும் நேரில் சமுகமளிக்கலாம்.

நேரம்

காலை 10.00-12.00 வரை

மாலை 05.00 - 6.00 வரை

தொடர்புகளுக்கு திரு.ச.பரராஜசிங்கம் ஸ்டேசன் றோட், கோண்டாவில்.

(C/1070)


## நிவாரண மோசடி

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தை அடுத்து இடம் பெற்ற நிவாரண நடவடிக்கைகளின் போது சுமார் 100க்கும் அதிகமான கிராம சேவகர்கள் ஊழல் நடத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சமூகசேவைகளின் பிரதியமைச்சர் எச்.எம்.சந்திரசேன கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த முறைப்பாடுகள் தொடர்பான விசாரணையை அமைச்சு தற்போது ஆரம்பித்துள்ளது. இனம்காணப்பட்ட 17 கிராமசேவகர்கள் தற்போது பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இவை தவிர, பல பிரதேச செயலாளர்களுக்கு எதிராகவும் மக்களினால் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ற)

# தோட்டத்துறையின் வருமானத்தில் ஒருபங்கு தொழிலாளர்களுக்கும் வழங்கப்படவேண்டும்

## உரிமையாளர்களுடன் 14இல் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

தோட்டத்துறையின் வருமானத்தில் தொழிலாளர்களுக்கு பங்கு தரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி தொழிற் சங்கங்கள் தோட்டநிறுவன உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை யொன்றை நடத்தவுள்ளனர்.

பெருந்தோட்ட தொழிலாளர்கள் எதிர் நோக்கும் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பாக தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கிடையிலும், பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனங்களுகிடையேயும் பேச்சுவார்த்தையொன்று நடைபெறவுள்ளது.

இப்பேச்சுவார்த்தை எதிர்வரும் 14 ஆம் திகதி பெருந்தோட்ட முதலாளிமாா சம்மேளனத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாக தொழிற் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பெருந்தோட்டப் பகுதிகளில் மரங்கள் தறிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதன் மூலம் கிடைக்கும் இலாபத்தில் 10 சதவீதத்தினை தொழிலாளர்களுக்கு பங்கீட்டு வழங்க வேண்டும்.

தோட்டக்ககாணிகளை மாணிக்கக் கல் அகழ்வதற்காக வழங்கும் போதும், விவசாயப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு வழங்கும் போதும் அதன் மூலம கிடைக்கும் வருமானத்தை தொழிலாளர்களுக்குப் பங்கிட்டுவழங்க வேண்டும். ஆகிய கோரிக்கைகள் தொடர்பில் இந்தப் பேச்வார்த்தை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தோட்டப் பகுதியில் மரங்கள் தறிக்கபப்படுவதனால் சுற்றாடல், சூழல் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும தோட்டகாணிகள் பழுதடைந்து வருவதாகவும் விசனம் தெரிவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

## 1800 கைதிகள் நேற்று விடுதலை

(கொழும்பு)

சுதந்திர தினத்தைமுன்னிட்டு நாடளாவியரீதியில் ஆயிரத்து 800 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட உத்தரவின் பேரில் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து 42 பெண்கள் உட்பட 520 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

அபராதத் தொகையை செலுத்த தவறியமை உள்ளிட்ட சிறிய குற்றச் செயல்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டவர்களே விடுதலை செய்யப்பட்டனர். (ந-9)

## 19 வயதுப் பிரிவு கிறிக்கெற் போட்டி

## கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட மட்டத்தில் நடந்த 19 வயதுக்குட்பட்டோருக்கான மென்பந்து கிறிக்கெற் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி வெற்றி பெற்றது.

கடந்த வியாழக்கிழமை கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தல், யாழ்.இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி மோதியது.

முதல் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக கல்லூரி அணி, 14.4 ஓவர்களில் சகல விக்கெற்களையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் வசிகரன் 14 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி 13.2 ஓவர்களில் 4 விக்கெற்றுக்கள் இழப்பிற்கு 75 ஓட்டங்களைப் பெற்று 6 விக்கெற்றுக்களால் வெற்றியீட்டியது. சாம்சன் ஆட்டம் இழக்காது 46 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இச்சுற்றுப் போட்டியில் கோட்டமட்டத்தில் இரண்டாம் இடத்தை யாழ். இந்துக் கல்லூரியும், மூன்றாம் இடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (ற)

## வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப் பின்னடிப்பு

### பொது மக்கள் விசனம்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்க இலங்கை மின்சாரசபை பின்னடித்துவருவதாக இப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே, மணற்காடு, குடத்தனைப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும், அவ் வேலைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மாமுனை, மருதங்கேணி, உடுத்துறை மற்றும் வேம்படி ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குமாறு கோரிக்கை விடுக்கபபட்ட போதும் இதுவரை அந்தப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-43)

## இராசி பலன்

**05.02.2005 (தை 23, சனிக்கிழமை)**
ஏகாதசி - பிற்பகல் 02.20 மணிவரை
மூலம் - பி.இ. 04.50 மணிவரை
இராகுகாலம் 09.35 - 11.05 மணிவரை
சுபநேரம்.03.35 -05.05 மணிவரை
சித்தம், ஏகாதசிவிரதம்

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தொழிலில் முன்னேற்றம், கலந்துரையாடல், கீர்த்தி. |
| இடபம் | லட்சுமிகரம், செய்தொழில் நன்மை, புதிய முயற்சி, எதிர்பாராத நன்மை. |
| மிதுனம் | பிறருக்கு உதவுதல், அபகீர்த்தி, புதிய திருப்பம், இடமாற்றம். |
| கடகம் | உறவினர் வெறுப்பு, தொழில் சிறப்பு, வாகன பயம், முயற்சி தாமதம். |
| சிங்கம் | தெய்வ தரிசனம், காரிய அனுகூலம், தனஇலாபம், நண்பர்கள் சந்திப்பு. |
| கன்னி | தொழில் நன்மை, உடல் நலம், எடுத்த காரியம் கைகூடும், உறவினர் வருகை. |
| துலாம் | போசன சுகம், சகோதரர் உதவி, காரிய தாமதம், குடும்பு கவலை. |
| விருச்சிகம் | மனச்சோர்வு, பொருட் சேர்க்கை, புதிய விடயம், காரிய தாமதம். |
| தனுசு | கௌரவ நிலை, அந்நியர் சந்திப்பு, போசன சுகம், பணவரவு. |
| மகரம் | சொத்து நன்மை, விவாதம், போசன சுகம், மனச் சஞ்சலம். |
| கும்பம் | தொழில் முயற்சி, எடுத்த காரியம் கைகூடும், செல்வாக்கு, பிறருக்கு உதவுதல். |
| மீனம் | தொழில் நன்மை, சிந்தனை மிகுதி, கோபப்படுதல், எதிர்பாராத நன்மை. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
_ வளவன்

# ஜே.வி.பி. முன்வைத்த திட்டம்





இலங்கையின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரண்டாவது பிரதான கட்சியான மக்கள் விடுதலை முன்னணி சுனாமி பேரழிவை அடுத்து, அடிப்படை ஜனநாயக உரிமைகளை கடுமையாக கீழிறக்கும் மற்றும் மீள் கட்டுமான சுமைகளை உழைக்கும் மக்களின் முதுகில் கட்டியடிக்கும் திட்டமொன்றை வெளியிட்டுள்ளது.


இந்தப் பேரழிவு இலங்கையின் அண்மைய வரலாற்றில் மிகவும் மோசமானதாகும். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40ஆயிரத்திற்கும் அதிகமாக இருப்பதோடு இன்னமும் சடலங்கள் கண்டெடுக்கப்படுகின்றன. சுமார் 90ஆயிரம் வீடுகள் தரைமட்டமாகியுள்ளதோடு கிட்டத்தட்ட பத்து லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள்.

பெரும்பாலானவர்கள் தமது ஜீவனோபாயங்களையும் அதேபோல் குடும்ப உறுப்பினர்களையும் இழந்துள்ளனா. தவிர்க்கமுடியாத வகையில் பாதிக்கப்பட்டவர்கள் வறியவர்களாக இருப்பதோடு, அவர்கள் மிகவும் ஆபத்தான நிலைமையில் வாழ்ந்துவரும் கிராமவாசிகள், மீனவர்கள் மற்றும் குடிசைவாசிகளுமாவர்.

இந்தப் பேரழிவு சுதந்திர முன்னணியைப் பொறுத்தளவில் அதன் அரசியல் நெருக்கடியை அதிகரிக்கச் செய்துள்ளது.

இந்தக் கூட்டணி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை முன்கூட்டியே பதவி விலக்கிய பின்னர், ஏப்ரலில் நடந்த தேர்தலில் சற்றே வெற்றிபெறறது. ஆனால், இந்தப் புதிய அரசாங்கம், நாட்டின் நீண்டகால உள்நாட்டு யுத்தத்திற்கு முடிவுகட்டுவதற்கான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் தோல்வி கண்டது. அல்லது பொருளாதார பிரச்சினைகளின் குழப்பத்தை தீர்க்கத் தவறியது. வாழ்க்கை நிலைமைகளை கீழிறக்குவதாக ஐக்கிய தேசிய முன்னணியை குற்றம்சாட்டிய சுதந்திர முன்னணியே இப்பொழுது மறுக்கப்பட்ட தேர்தல வாககுறுதிகள் மற்றும் விலை அதிகரிப்புக்கு எதிரான போராட்டங்களின் இலக்காகியுள்ளது.

சுனாமி தாக்கி நான்கு வாரங்களின் பின்னர், அரசாங்க விரோத



அலை உருவாகிக்கொண்டிருக்கிறது.


பெரும்பாலான உயிர் தப்பியவர்கள், அவசர சேவையாளர்கள் மற்றும் ஏனையவர்களும் முன்னெச்சரிக்கை வழங்கப்படாமை மற்றும் உத்தியோகபூர்வ நிவாரண நடவடிக்கைகளின் பற்றாக்குறைகளையிட்டு நியாயமான முறையில ஆததிரமடைந்துள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, அரசாங்கத்தின் துயர்துடைக்கும் முயற்சிகளுக்கு வேறுபட்ட விதத்தில், பிரச்சினைகளை சாதாரண உழைக்கும் மக்கள் தங்களாகவே பொறுப்பேற்றுக் கொண்டதோடு, இன, மத பின்னணிகளைக் கருதாமல் ஒன்றிணைந்து செயற்பட்டனா.

ஜே.வி.பி இந்த சுய அர்ப்பணிப்பு உணர்வுகளை அரசாங்கத்திற்கு முண்டுகொடுப்பதன் பேரில் சுரண்டிக்கொள்ளவும் திசை திருப்பிக் கொளளவும் நடவடிக்கை எடுக்கின்றது. 1960களில் சிங்களப் பேரினவாதம் மற்றும் கிராமப்புற தீவிரவாதத்தையும் அடிப்படையாகக் கொணடு ஸ்தாபிக்கப்பட்ட இந்தக் கட்சி, முதற்தடவையாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றது. இந்தக் கடசியின் பிரதான சிறப்பியல்பு, தமிழர் விரோத இனவாதமும் மற்றும் தமிழீழ விடுதலைபுலிகளை நசுக்குவதற்கான யுத்தம் தொடர்வதை ஆதரிப்பதுமாகும்.

பல சந்தர்ப்பங்களில் சோசலிஸ்டுகள் என்று கூறிக்கொண்டபோதிலும், இப்போது ஜே.விபி வீழ்ச்சி கண்டு வரும் வாழ்க்கை நிலைமைகளின் மத்தியில் ஆட்சி செய்யும் முதலாளித்துவ அரசாங்கத்தின் ஒரு பகுதியாகியுள்ளது. ஜே.வி.பியின் பிரேரணைகளின் பிரதான இலக்கு தேசிய ஐக்கியமாகும். அது ஸ்தாபிக்கக் கோரும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய நடவடிக்கை நிலையம் ஜனாதிபதியால் அல்லது அவர் இல்லாதபோது பிரதமரால் தலைமை வகிக்கப்படும். இந்த நிலையம், பொலிஸ் மற்றும் ஆயுதப்படைகளின தலைமை அதிகாரிகளையும் வர்த்தகத் தலைவர்கள், புத்திஜவிகள் மற்றும் தொழில வல்லுநர்களையும் சேர்த்து அனைத்து அரசியல் கட்சிகளையும் தகுதி வாய்ந்த அலுவலர்களையும் உள்ளடக்கியிருக்கும். இந்த சபை ஒரு தேசிய மாநாட்டின் ஊடாக ஸ்தாபிக்கப்படுவதுடன் அனைத்து மீள் கட்டமைப்பு பணிகளுக்கும் பொறுப்பாக இருக்கும்.

இந்த தேசிய நடவடிக்கை நிலையத்தில் எந்தவொரு கட்சியும் அங்கம் வகிக்க முடியும். ஆயினும, அவ்வாறு செய்வதனால் ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கு எதிர்மாறான அரசியல் வேறுபாடுகளை ஓரங்கட்டி வைக்கவேண்டிய நிலை ஏற்படும். ஐக்கியம் மற்றும் தேசத்தை மீளக் கட்டியெழுப்புதல் என்ற போர்வையின் கீழ் ஜே.வி.பி பிரேரிப்பது



என்னவென்றால், எதிர்ப்புகளையும் கருத்து வேறுபாடுகளையும் நசுக்குவதற்காக அரசாங்கம், இராணுவம் மற்றும அரச கருவிகளும் மேலாதிக்கம் செய்யும் ஒரு சர்வாதிகார இயந்திர அமைபபை ஸ்தாபிப்பதேயாகும். அரசியல் வேறுபாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதானது எல்லாவற்றுக்கும் மேலாக அரசாங்கத்தை விமர்சிப்பதை நிறுத்துவதையே அர்த்தப்படுத்துகின்றது.

கோட்பாட்டளவில் ஜே.வி.பி ஐக்கியத்திற்காக அழைப்பு விடுக்கும் போது, அது விடுதலைப்புலிகள் மற்றும் விடுதலைப்புலிகள் சார்ந்த அமைப்புகள் உள்ளடக்கப்பட மாட்டாது என்பதை தெளிவுபடுத்தியுள்ளது. உண்மையில், விடுதலைப்புலி

கள் சம்பந்தமாக ஒரு காத்திரமான நிலைப்பாட்டை எடுக்க அனுகூலமான நேரம் இதுவே என அதன் தலைவர்கள் யோசனை தெரிவித்துள்ளனர். இந்தக் கருத்து இராணுவ உயர்மட்டத்தில் சில பிரிவினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஜே.வி.பி பாராளுமன்ற தலைவர் விமல் வீரவன்ச, ஜனவரி 9 ஹத ஐலண்ட் பத்திரிகைக்கு கருத்துத் தெரிவிக்கையில், விடுதலைப்புலிகள் சுனாமியின் விளைவாக முன்னொருபோதும் இல்லாத மனித மற்றும் பொருள் இழப்புக்கு முகம் கொடுத்துள்ளனர். இது நிச்சயமாக அவர்களது எதிர்ப்பு இயலுமையை மழுங்கச் செய்யும் எனக் குறிப்பிட்டுள்ளார். அவா விடுதலைபபுலிகளின் இடைக்கால நிர்வாகசபை பிரேரணை பற்றி அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான எந்தவொரு திட்டத்தையும் கைவிடுமாறு அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்தார்.

இது முடிவில் யுத்தத்திற்கு இட்டுச்செல்லும் என விடுதலைப் புலிகள் முன்னெச்சரிக்கை செய்திருந்தனர். ஜே.வி.பி, விடுதலைப் புலிகளுக்கு சார்பான அமைப்புகளூடாக சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகள் அனுப்பப்படுவதை எதிர்ப்பதன் மூலம் இனவாதபதற்ற நிலைமைகளை கிளறிவிட முயற்சித்தது.

இரு தசாப்தகால யுத்தத்தால் பாழாக்கப்பட்டுள்ள நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கும் சுனா மியின் பாதையில் நேரடியாக அமைந்துள்ளன. இப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர்களாக இருப்பதுடன் அவர்களுக்கு உதவ வல்ல பதிலீடுகள் கிடையாது.

* * *

## மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெற்றோரின் ஒத்துழைப்பு மிக அவசியம்

**-றிஷாத் பதியுதீன்**

(புத்தளம்)

மாணவ சமூகத்தினது கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களது பங்களிப்பினைப் போன்று, பெற்றோர்களது ஒத்துழைப்பும் மிகவும் அதிக

திருந்தனர்.

அமைச்சர் றிஷாத் பதியுதீன் அங்கு மேலும் பேசுகையில்,

இன்று கல்வியானது உலகை வியாபித்துள்ளது. எத்தனை மாற்

மூலம் இப்பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியினை இன்னும் முன்னேற்

## மிதிவெடிகள் அகற்றப்படவில்லை மட்டுவில் விவசாயிகள் பாதிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பரிவிலுள்ள மட்டுவில் கிழக்கு கமலாசினி வித்தியாலயத்துக்கு அருகிலுள்ள பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றும் பணியில் ஹலோ டிரஸ்ட் நிறுவனம் தற்போது ஈடு

இது தொடர்பாக இப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றி உதவும்படி இப்பகுதியில் இருக்கின்ற குடும்பங்கள் சம்பந்தப்பட்டவர்களைச் கோரியிருந்த போதிலும் எத்தகைய நடவடிக்கையும இதுவரை எடுக்கப்படவில்லை

## பெற்றோரின் ஒத்துழைப்பு மிக அவசியம்

**-நிஷாத் பதியுதீன்**

(புத்தளம்)

மாணவ சமூகத்தினது கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களது பங்களிப்பினைப் போன்று, பெற்றோர்களது ஒத்துழைப்பும் மிகவும் அதிகமாகத் தேவைப்படுவதாகத் தெரிவித்த புனர்வாழ்வு வன்னி மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் நிஷாத் பதியுதீன், கல்வியினை உரியமுறையில் மாணவர்கள் பெறுவதன்மூலம் சிறந்த மனிதர்களை உருவாக்கமுடியும் எனக கூறினார்.

மன்னார் கரிசல் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கான புதிய வகுப்பறைக் கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் பதியுதீன் மேற்கண்டவாறு கூறினார்.

மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம், பிரதேச செயலாளர் வரதஸ்வரன், வலயக்கல்விப்பணிப்பாளர் ஆர்பல் ரெவல், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.என்.அய்யப, அமைச்சரின் இணைப்புச் செயலாளர் அலிகான் ஷரீப் உட்படப் பலரும இவ்வைபவத்திற்கு சமுகமளித்திருந்தனர்.

அமைச்சர் நிஷாத் பதியுதீன் அங்கு மேலும் பேசுகையில்,

இன்று கல்வியானது உலகை வியாபித்துள்ளது. எத்தனை மாற்றங்கள் வந்தபோதிலும் அவற்றுக்கெல்லாம் முகம் கொடுத்து எதிர்நீச்சல் போடுகின்ற துணிச்சலை, கல்வியறிவினைப் பெற்றுக கொள்வதன் மூலமே பெறமுடியும்.

கல்வியினைப் பெற்றுக்கொள்ளாத சமூகத்தை இன்றைய காலம மதிப்பளிப்பதில்லை. எங்கு சென்றாலும் இந்தக் கல்வியினை தேடிப் பெற்றுக்கொள்ளவேண்டியது மாணவர்களது தலையாய கடமையாகும. அதேபோன்று கற்பவர்களுக்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பது பெற்றோர்களினதும், அரசியலிலுள்ள எங்களதும் பணியாகும்.

கடந்த ஆண்டில் எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் பெரும் தொகையினை கல்விக்கும், பாடசாலைகளின் அபிவிருத்திக்கும் செலவு செய்துள்ளேன். இதன் மூலம் இப்பிரதேசத்தின் கல்வி அபிவிருத்தியினை இன்னும் முன்னேற்றமடையச் செய்யமுடியுமாக இருந்தது.

இவ் வருடத்திலும் மாணவ சமூகத்தினது நலன்கருதி இப்பணிகள முன்னெடுக்கப்படும். அதேவேளை, இப்பாடசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் நிஷாத பதியுதீன் உறுதியளித்தார்.

இதேவேளை, பேசாலை கரிசல பிரதேசத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து கவனம் செலுத்தப்படுமெனவும் அமைச்சர் அங்கு உரையாற்றும்போது கூறினாா. (ற-15)

## மட்டுவில் விவசாயிகள் பாதிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள மட்டுவில் கிழக்கு கமலாசினி வித்தியாலயத்துக்கு அருகிலுள்ள பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றும் பணியில் ஹலோ டிரஸ்ட் நிறுவனம் தற்போது ஈடுபட்டுள்ளது.

இதேவேளை, மட்டுவில் வடக்குப் பகுதியிலுள்ள வயல் நிலங்களில் மிதிவெடிகள் இன்னமும் அகற்றப்படாமல் இருப்பதால் அப்பகுதிகளில் இருக்கின்ற விவசாயக் குடும்பங்கள் விவசாய முயற்சிகளில் ஈடுபடமுடியாமல் இருக்கின்றன.

மேலும் மட்டுவில் வடக்கு வயல் பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேணடாம் என 2002 ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டதாகவும் விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றி உதவும்படி இப்பகுதியில் இருக்கின்ற குடும்பங்கள் சம்பந்தப்பட்டவர்களைச் கோரியிருந்த போதிலும் எத்தகைய நடவடிக்கையும இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் அறியப்படுகின்றது.

(ப-16)

## மீண்டும் இயங்குகின்றன

சுனாமி அனர்த்தங்களால் சேதமடைந்த பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவு சங்க கிளைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

அழிந்துபோன ஆறு கிளைகளில் இரண்டு நிரந்தர கட்டடத்திலும் மற்றைய நான்கு தற்காலிக கட்டடத்திலும் இயங்கி வருகின்றன. (ப-35)

## ஆத்மசாந்தி பிரார்த்தனை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மணல்காடு பகுதியில் சுனாமி பேரலை அனர்த்தங்களால் பலியானோர் ஆத்மசாந்தி வேண்டி குடத்தனை பேதுரு வானவர் தேவாலயத்தில் மணற்காடு பங்குத்தந்தை அருட்திரு.றோய் பெர்டினைன் அடிகளார் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத்திருப்பலிப் பூசைகளின்போது பலியானவர்களின் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் வழிபாடுகளுக்கு மத்தியிலும் வாய்விட்டு கதறி அழுததைக் காணக்கூடியதாக இருந்தது.

(ப-35)

## பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு செங்கடகல லயன்ஸ்கழகம் உதவி

(தென்மராட்சி)

வடபகுதியில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு செங்கடகல லயன்ஸ் கழகம் ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நெறிப்படுத்தலில் வழங்கியுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளபபட்ட இத்திட்டத்தின்போது செங்கடகல லயன்ஸ் கழகத்தின் தலைவர் லயன் ஜலீல், வலயத் தலைவர் லயன் லில்லி குணசேகரா, திட்டப் பொறுப்பாளர் லயன் பேராசிரியர் சமரசிங்கா ஆகியோர் நேரில் பங்குகொண்டிருந்தனர்.

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், ஆழியவளை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை, வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க பாடசாலை, தாளையடி றோமன் கத்தோலிக்க பாடசாலை, கச்சாய் வீதி றோமன கத்தோலிக்க பாடசாலை ஆகியவற்றுக்கு இக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் லயன்ஸ் கழகங்களின் இணைப்பாளர் லயன் டாக்டர்.எஸ்.எஸ்.அருளானந்தம், புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் க.ஜெயராஜா ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

(ப-16)

## இன்று ஒரு தகவல்

# துளசியின் மகிமை

அலுவலகத்தில் ஏகப்பட்ட கணக்கு வழக்கை பார்த்து விட்டு மாலையில் களைத்துப் போய் வீட்டுக்குத் திரும்புகிறார் ஒருவர். அந்த நேரம் பார்த்து கணக்குப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு ஓடிவருகிறான் மகன். அவரிடம "இந்தக் கணக்கு விளங்கவில்லை அப்பா! எப்படிச் செய்வது என்று சொல்லித் தாருங்கள்" என்றான். அப்பா தன்னை விட கணக்கில் வீக் என்பது அவனுக்கு எப்படி தெரியும்? அப்பா பார்த்தார் "காலையில் சொல்லித்தருகிறேன். இப்போது களைத்துப்போய் வந்திருக்கிறேன் மூளை இப்போது சரியாக வேலை செய்யாது" என்று ஒருவாறு சமாளிக்கிறார்.

இதுபோன்ற அப்பாக்களுக்கெல்லாம் ஒரு யோசனை. உங்களுக்கெல்லாம் களைப்பாக இருக்கின்ற சமயத்தில் தேநீர் சாப்பிடவேண்டும் என்று தோன்றுகிறதல்லவா? அதற்குப் பதிலாக 'துளசி நீர்' அருந்திப்பாருங்கள். அதை அருந்தினால் மூளைக்கு சுறுசுறுப்பும் புத்துணர்ச்சியும் கிடைக்கும். அதன் பின் உங்கள் மகன் தரும் கணக்கைச் செய்வீர்கள்.

சரி... அதைச்சாப்பிடத் தயார்! அது எந்தக்கடையில் கிடைக்கும்? இதுதானே அந்தக் கேள்வி! கடையில் கிடைக்காது. நீங்கள் தான் வீட்டில் தயாரிக்கவேண்டும். துளசி இலை பத்தினை எடுத்துக்கொள்ளுங்கள். ஒரு குவளை தண்ணீரில் இந்த பத்து துளசி இலைகளையும் போட்டுக் காய்ச்சவேண்டும். ஏலக்காய் 2 ,தேன் 2ஸ்பூன், கொஞ்சம் பசும்பால் போன்றவற்றைக் கலந்து கொள்ள வேண்டும் அவ்வளவு தான். காலை நேரத்தில் இதைத் தயாரித்து குடித்தால் நாள் முழுதும் சுறுசுறுப்பாக இருக்குமாம். இரத்தமும் சுத்தமாகுமாம்.

சாதாரணமாக நாம் தேநீர் தயாரிப்பது மாதிரி இதனைத தயாரிக்கலாம். தேயிலைக்குப் பதிலாக பத்துப் பதினைந்து துளசி இலையைப் போடவேண்டும் அவ்வளவு தான். துளசியை சாதாரணமாக நினைத்துவிடாதீர்கள். துளசியில் அதிசயமான சில எண்ணெய்ப்பொருட்கள் உள்ளன. பாம்புக் கடிக்கு உபயோகப்படக்கூடிய சில மருநதுச் சத்துக்கள் துளசி இலையில் உண்டு. இரத்த அழுத்தத்தைக் குறைக்கக்கூடிய குணமும் அதற்கு உண்டு.

துளசி இலையை எங்கேயாவது கண்டால் சும்மா விட்டுவிடாதீர்கள் பறித்து வாயில் போடுங்கள். சும்மாமென்று விழுங்கும் போது குடற்பகுதியில் மென்மை உண்டாகும். ஒரு சில குடல் நோய்களையும் அது தீர்க்கிறது. இருதய தசையில் உள்ள இறுக்கத்தைத் தளர்த்தி சுகம் தரக்கூடிய தன்மையும் துளசி இலைக்கு உண்டு. வயிற்றுப்புண், ஆஸ்துமா, இரத்த அழுத்தம்,குடல் சம்பந்தமான வியாதிகள் எல்லாவற்றிற்கும் துளசி கைகண்ட மருந்து. இதுபோன்ற கோளாறுகளுக்கெல்லாம் துளசி நீர் அருந்தினால் குணம் தெரியும்.

லக்னோவில் உள்ள கிங் ஜார்ஜ் மெடிக்கல் கல்லூரி மருத்துவ நிபுணர்கள் இதைக் கண்டுபிடித்துச் சொல்லியிருக்கின்றனர். வெறும் துளசி இலையைப் பறித்துச் சாபபிட்டாலே உடல் வலி, அசதி, சோர்வு, பசியின்மை எலலாம் ஓடிப்போய்விடுமாம். லக்னோ கல்லூரி டாக்டர் நரேந்திரசிங் இதைச் சொல்லியிருக்கிறார். துளசி இலையை தினமும் சாப்பிட்டுக் கொண்டுவந்தால் உடலில் புகக்கூடிய பலவகையான நோய்க்கிருமிகளை எதிர்த்து அழிக்கும் சக்தி நமக்கு கிடைத்து விடும் என்கிறார் அவர். கருத்தடைக்குக கூட இதை உபயோகப்படுத்தலாமா என்று யோசிக்கின்றனராம்.

துளசியின் மகிமை தெரிந்து தான் நமது முன்னோர்கள் அதை வீடுகளில் வளர்த்தனர். ஆலய வழிபாடுகளில் அதை உபயோகப்படுத்தினார்கள். எது எப்படியிருப்பினும் மூளை சுறுசுறுப்பாக இருப்பதற்கு இது தேவை என்று தெரிந்துவிட்டது. அதன் பின் சும்மா இருக்கலாமா?

ஒரு அம்மா சொன்னார் "எனது கணவருக்கு மூளை அதிகம் அதில் எனக்கு சந்தேகமில்லை! ஆனால் அவர் துளசி நீர் அருந்த ஆரம்பித்த பின்புதான் அதைச் சரியாக உபயோகப்படுத்த ஆரம்பித்தார்" என்றார். "அது எப் படி?" என்று கேட்டேன். "முன்பெல்லாம் அவர் கதை எழுதி பத்திரிகைக்கு அனுப்புவார். அது வேண்டாம் என்று திரும்பி வந்ததும் என்னிடம் தருவார் கடையில் போடு வதற்கு! இப்போதெல்லாம் அவர்கதை எழுதி நேரடியா கவே என்னிடம் தந்துவிடுவார்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மக்களின் பாதுகாப்பையும், மனிதவுரிமைகளையும்

# பலமான நீதிமன்றக் கட்டமைப்பின் மூலமே உறுதிப்படுத்த முடியும்- பேராசிரியர் வனசிங்க

(கொழும்பு)

பொதுமக்களினது பாதுகாப்பையும் மனித உரிமைகளையும் பலமான நீதிமன்றக் கட்டமைப்பின் மூலமே உறுதிப்படுத்த முடியும் என நீதிமன்ற அமைப்பு முறையை மீள் புனரமைப்பதற்கான யோசனைகளை முன்வைக்கும் நோக்குடன் அமைக்கப்பட்ட பிரஜாவுரிமை ஆணைக் குழுவின் தலைவர் பேராசிரியர் சேல்ரன் வனசிங்க தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற அமைப்பு முறை சமூகத்தின் அபிலாஷைகளை அடித்தளமாகக் கொண்டு புனரமைப்புச் செய்யப்படவேண்டும். தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மீள் புனரமைப்பிற்கான யோசனைகளுக்காக சமூகத்தின் செயற்றிறன் மிக்க பங்களிப்புத் தேவையென நான் எதிர்பார்க்கிறேன்.

நீதிமனறக் கட்டமைப்பு முறையினுள் மீள்கட்டமைப்பை மேற்கொள்வதற்கான பிரஜாவுரிமை ஆணைக் குழுவன கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெறறபோதே அதன் தலைவர் சேல்ரன் வனசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழு சிவில் சமூக உரிமைகளை பலப்படுத்துவதற்காக மக்களின் பங்களிப்புடன் மீள் புனரமைப்பு யோசனைகளை இனம்காணும். அத்துடன் சந்தாப்பங்களுக்கு ஏற்ப மக்களினால் முன்வைக்கபடும் யோசனைகளை ஆராயவுள்ளதுடன்,இந்த யோசனைகளை எழுத்து மூலமாகவோ வாய்மொழி மூலமாகவோ ஆணைக்குழுவுக்குத் தெரிவிக்க முடியும்.

மககளினது கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் சிறந்த கருத்துக்களை பெறக்கூடிய சந்தர்ப்பங்களை ஒழுங்கு செய்துள்ளோம் மக்களும் வினைத்திறன் மிக்கவர்களாக இந்த செயற்பாட்டில் கலந்து கொள்வதில் தான் எமது ஆணைக்குழுவின் செயற்பாடு தங்கியுள்ளது.

காலததுக்கு ஏற்றவகையில் மக்கள் தங்களது கருத்தை எங்களுடன் பரிமாறிக்கொள்வதன் மூலம் தேவையான தீர்வுகளையும் விதந்துரைகளையும் உருவாக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ற-8)

## சர்வதேசத்தின் நிதியைப் பயன்படுத்துவது குறித்து

# நிபுணத்துவ ஒத்துழைப்பை இலவசமாக வழங்க பட்டயக்கணக்காளர் நிறுவனம் முன்வருகை

(கொழும்பு)

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்காக கிடைக்கும் நிதியுதவிகளை பொறுப்புடன் பயன்படுத்துவதற்கு தேவையான நிபுணத்துவ ஒத்துழைப்பை இலவசமாக வழங்குவதற்கு இலங்கை பட்டயக்கணக்காய்வாளர் நிறுவனம் தயாராரகவுள்ளதாக கணக்காய்வாளர் நிறுவனத்தின் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான விசேட செயற்குழு உறுப்பினரும் முகாமைத்துவ ஆலோசகருமான அஜித் ஹப்பால் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக எமது நிறுவனத்தின் உறுப்பினர்களை முழுநாடும் ஏற்றுக்கொண்டுள்ளன. அவாகள் இந்த நிதியுதவி தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைளில் ஈடுபடுவர்.

இந்த நடவடிக்கைகளுக்காக கணக்காய்வு நிறுவனத்தின் நிதியம் ஒன்றை ஏற்படுத்தவுள்ளோம். இந்த நிதியம் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கான கொடுப்பனவை வழங்கும்.

இதனால் நிவாரணப்பணிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு கணக்காய்வு சேவையை இலவசமாக வழங்க நாம் தயாராகவுள்ளோம்.இதன்மூலம் நிறுவனங்களின் கணக்கு நடவடிக்கைகளை உரியமுறையில்மேற்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(ற-8)

# செலவினங்களின் கணக்காய்வுக்கு மெகன்ஸ் கம்பனி உதவி

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு ஒழிவு மறைவன்றி நிவாரண உதவிகள் வழங்கப்படும் என்று அரசாங்கம் உறுதியளித்துள்ளது. இது சம்பந்தமாக ஜனாதிபதி உரிய அறிவுறுத்தல்களை விடுத்திருப்பதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஏற்படும் செலவினங்கள் குறித்து கணக்காய்வு செய்வதில் சர்வதேச புகழ்வாய்ந்த மெகன்ஸ் கம்பனி உதவிகளை வழங்கியுள்ளது.

இந்தத்திட்டத்தின் அபிவிருத்தி முயற்சிகள் தொடர்பான சகல தீர்மானங்களையும் அமுலாக்கத்தையும் கம்பனி பரிசீலனை செய்யும். (ற)

## வடமராட்சி வடக்கில்

# நன்னீர் உவர்நீரானது பொதுமக்கள் சிரமம்

(பொன்னாலை)

ஆழிப்பேரலை அனர்த்தங்களுக்குள்ளான வடமராடசிப் பகுதியின் வடக்கு கரையோர நன்னீா கிணறுகள் யாவும் உவர் நீராக மாறிவிட்டதாகவும் இவை தொடர்ந்தும் உவர்நீராகவே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிக் கிணறுகள் எல்லாம் நன்னீா வளமுடையவையாகவே இருந்து வந்தன. ஆழிப்பேரலையின் பின்னரே இக்கிணறுகள் உவர்நீராக மாறியிருக்கின்றன. இக்கிணறுகளை பல தடவைகள் குளோரின் இட்டு இறைத்துத் துப்புரவு செய்தும் நீரின் தன்மை மாற்றமடையவில்லை தொடர்ந்தும் உவர்நீராக இருந்து வருகின்றது.

இதேவேளை, அனர்த்தம் நடைபெற்று ஒரு மாதம் கடந்து விட்ட நிலையிலும்,இக்கிணறுகளில் நீர் உவராகவே இருப்பதால் மீளக்குடியமரும் மக்களுக்கு தொடர்ந்தும நன்னீா சேவை அவசியமாகவே உள்ளது.(ப-49)

# இருபாலை முனிகோவில் வீதி செப்பனிடப்படவில்லை

(இருபாலை)

இருபாலை கிழக்கு முனிகோவில் கடந்த 3 வருட காலத்திற்கு முன்பு செப்பனிடப்பட்டு முதல் முறை தார் இடப்பட்டது. ஆனால் இரண்டாம் முறை தார் இடப்படவில்லை இதனால் செப்பனிடப்பட்ட வீதியும் அழிவடையும் நிலையிலே உள்ளது என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து 3 முறை அப்பகுதி மக்கள் பிரதேசசபையிடம் கடிதம் மூலம் தெரியப்படுத்தியும் பலன் கிடைக்கவில்லை என மக்கள் கவலைதெரிவித்துளளனர்.(ப-74)

# திருட்டு மின்பெறுவோரால் மின் பாவனையாளர் சிரமம்

(பொன்னாலை)

வடமராட்சிப் பகுதியில் திருட்டு மின்சாரம் பெறுவோரினால் மின் பாவனையாளர்கள் பலத்த இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அல்வாய் வடக்கு மறவன்புலோ, அல்வாய் வடமேற்கு ஆகிய பகுதிகளில் திருட்டு மின்சாரம் பெறுவோர் தொகை அதிகரித்து வருவதாக இப்பகுதிகளைச் சேர்ந்த மின்பாவனையாளர்கள் இலங்கை மின்சார சபையின் பிரதேச அலுவலகமான பருத்தித்துறை அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (ப-49)

## வடமராட்சி வடக்கு

# கடற்றொழில் சங்கத்திற்கு கணனி, நிழற்பிரதி இயந்திரம்

(பொன்னாலை)

வடமராட்சி-வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் அலுவலகப் பாவனைக்கென கணனி ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இக் கணனியை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் வழங்கியுள்ளார்.

இதேவேளை, அவ்வலுவலகத்தின் பணிகளுக்கென போட்டோ பிரதி இயந்திரம் ஒன்றையும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சநதிரன் வழங்கியுள்ளார்.

இவ்விரு உபகரணங்களும் பாராளுமன்ற உறுப்பினாகளின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்டதாகும். (ப-49)

# பயில விரும்புபவர்கள் பதிவுசெய்து கொள்ளலாம்

(பொன்னாலை)

சணடிலிப்பாயில் இயங்கும் தொழிற்பயிற்சி நிலையத்தில் மின் இணைப்பு,மேசன், தச்சுவேலை என்பவற்றையும் பழக விரும்புபவர்கள் தங்கள பெயர் விபரங்களை உடன் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பயிற்சி 6 மாத காலம் இடம் பெறும் என்றும் பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புபடியாக மாதம் ஒன்றுக்கு 450 ரூபா வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது. பதிவு செய்பவர்கள் 16 வயதிற்கு மேற்பட்டவராகவும் 8ஆம் தரத்திற்கு மேல் பயின்றவராகவும்இருப்பது அவசியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-49)

# வீதியை திருத்த கோரிக்கை

(பொன்னாலை)

யாழ்.அராலி வீதி மிக மோசமாகப் பாதிப்படைந்திருககின்றது. அராலிச் சந்தியிலிருந்து வட்டுக்கோடடை அரசினர் கிராமிய வைத்தியசாலை வரையான வீதி பகுதியில் ஆங்காங்கே பாரிய கிடங்குகளும், குன்று குழிகளும் காணப்படுகின்றது.

இதனால் பயணிகள் பஸ் போக்குவரத்துச் சேவை உட்பட பல்வேறு போக்குவரத்துக்களுக்கும் சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றன. வலி- மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இவ் வீதியை விரைவில் செப்பனிட்டு தரவேண்டும் என அராலிப்பகுதி பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ப-49)

### யாழ்.குடாநாட்டில் விதவைகளின் தொகை அதிகரிக்கின்றது

# யுத்தம், இயற்கை அனர்த்தங்களால் மட்டும் 26745 பெண்கள் விதவைகளாகியுள்ளனர்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த இரு தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்த அனர்த்தங்கள் காரணமாகவும் இயற்கை மரணங்கள காரணமாகவும் 26ஆயிரத்து 745 பெண்கள் விதவைகளாகியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இத்தொகையில் சுமார் நாற்பது சதவீதமானவர்கள 50வயதுக்குட்பட்டவர்களாக இருந்துவருகின்றனர் எனவும் இவர்களில் பெரும்பாலானவர்கள் போதிய வருமானம் இல்லாத நிலையில் மற்றவர்களிடம தங்கிவாழவேண்டியதாகவுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இதேவேளை மொத்தத் தொகையில் 15ஆயிரத்து 709 விதவைப் பெண்கள் அரசின் இலவச நிவாரண உதவியை மாதாந்தம் பெறறுவருகின்றனர். இருந்த போதிலும் கூட கிராமப் புறங்களில் இருக்கின்ற கணவன்மார்களை இழந்த நிலையில் இருக்கும் பெண்கள் தமது பிள்ளைகளின் கல்வி மற்றும் உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் பெரும் கஷ்டங்களையும், சவால்களையும் எதிர்நோக்கி வருவதாகவும் தெரியப்படுகின்றது.

மாவட்டத்தில் கணவன்மார்களை இழந்த நிலையல் இருக்கின்ற இளம்பெண்களின் வாழ்க்கையில் நிரந்தரமான வருமானங்களை ஈட்டுவதற்கான பல முயற்சிகள் கடந்த காலங்களில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சில பொது அமைப்புக்களினால மேற்கொள்ளப்பட்டு வந்தபோதிலும்கூட, அவை நிலைத்து நிற்கக்கூடியதாக அமைந்திருக்காமையினால் குறித்த பெண்கள் தமது வருமானங்களை உறுதிப்படுத்தமுடியாமல் போய்விட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இத்தகைய குடும்பங்களில் இருக்கக்கூடிய சிறுவர்கள், தமது குடும்பங்களின் வறுமை நிலையைப் போக்கும் முயற்சியினால் பாடசாலைக் கல்விக்கு முழுக்குப போட்டுவிட்டு, வருமானம் தேடும முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ப-16)

## பரீட்சை முடிவுகள் வெளியாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இறுதிவருட மாணவர்களினதும், முதலாம் வருட மாணவர்களினதும் பரீட்சை முடிவுகள் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்பாக வெளியிடப்படவுள்ளது.

இதில் முதலாம் வருட மாணவர்களின் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையிலேயே சிறப்புககலை, பொதுக்கலைத் தெரிவு இடம்பெறுவதும் குறிப்பிடத்தக்கது. (ற-95)

# கொடுப்பனவை வழங்காதுவிடின் போராட்டங்களில் குதிப்போம்

### சுப்பர்மடம், கொட்டடி மீனவர்கள் எச்சரிக்கை

(மருதங்கேணி)

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறிய பகுதிகளான கொட்டடி, சுப்பர்மடம் மீனவக் கிராமங்களுக்கு வீட்டுப் பாவனைப் பாத்திரங்கள் வழங்குவதற்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என மீளக் குடியேறிய மக்கள் தெரிவித்தனர்.

மீளக் குடியேறிய மக்களுக்கு பாத்திரங்கள் வாங்குவதற்கு 2ஆயிரத்து 550ரூபா வழங்கப்படவுள்ளதாகவும் அப்பணம் மேற்குறித்த இரு கிராமங்களுக்கும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பணத்தை தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் இல்லையேல் போராட்டம் நடாத்தப்போவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-35)

# சகல வசதிகளுடன் கூடிய நவீன நகரமாக மன்னாரை மாற்றுவதற்கு நடவடிக்கை

(புத்தளம்)

மன்னார் நகரத்தை சகல வசதிகளுடன் கூடிய நவீன நகரமாக மாற்றுவதற்கான செயற்திட்டமொன்று நகர நிர்மாண அமைச்சின் உதவியுடன் முன்னெடுக்கவுள்ளதாக வன்னி மாவட்ட புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான றிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி குறித்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் மன்னார் அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே அமைச்சர் பதியுதீன் இந்தத் தகவலை வெளியிட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அரச அதிபரின் பணிமனையில நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மேலும் / அமைச்சர் தெரிவிக்கையில்,

வடக்கு பிரதேசம் எம்முடையதாகும். அதனை அபிவிருத்தி செய்து மக்களுக்கான வசதிகளை ஏனைய நகரங்களைப் போன்று ஏற்படுத்த வேண்டிய தேவைபாடு உள்ளது. இதனை மேற்கொள்ள இன, மத ரீதியான பாகுபாடுகள் எம்மிடத்தில் தேவையில்லை. அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு நாம் செயற்பட வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளது.

வன்னியில் பிறந்த ஒவ்வொருவருக்கும் அபிவிருத்திகளை அனுபவிக்கின்ற உரிமையிருக்கின்றது. அதனைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது எங்களினதும், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளான அனைவரினதும் பொறுப்பாகவுள்ளது.

நான் ஏற்றுள்ள இந்த அமைச்சின் கீழ் 18 அமைசசுக்களின் செயற்பாடுகளை ஜனாதிபதி இணைத்துத் தந்துள்ளாா. இதன்மூலம் எமது மாவட்டத்தை துரிதகதியில் அபிவிருத்தி செய்ய முடியும். இந்த அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கச் சகலரதும் ஒத்துழைப்புத் தேவை. அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை நாம் கட்டுப்படுத்தப் போவதில்லை.

அதேவேளை, மக்களுக்கு உரிய அபிவிருத்திகள் சென்றடைவதை உறுதி செய்யவேண்டிய கடப்பாடு எமக்கிருக்கின்றது. ஆகையினால், அரச சார்பற்ற நிறுவனங்கள் தாங்கள் முன்னெடுக்கின்ற வேலைத்திட்டங்கள் குறித்து, அரசாங்க அதிபர் உள்ளிட்ட மாவட்ட அபிவிருத்திக் குழுவினை அறிவுறுத்துவதன் மூலம் இந்த திட்டங்களை வலுவுள்ளதாக மாற்றமுடியுமெனக் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சின் செயலாளர் ஏ.சீ.எம்.றாசிக், அமைச்சரின் இணைப்புச் செயலாளர் அலிகான் ஷரீப், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.என்.அய்யூப் உட்பட மற்றும பலர் கலந்துகொண்டனர். (ற-15)

# திணைக்கள அதிகாரிகள் அசமந்தம் ஓய்வூதிய வழங்கலில் இழுபறிநிலை

### முன்னாள் அதிபர் ஒருவர் ம.உ.ஆ.குழுவில் முறைப்பாடு

(தென்மராட்சி)

அதிபர் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த அதிபர் ஒருவருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு கடந்த ஏழு வருடங்களாக வழங்கப்படாமல் தொடர்ந்தும் இழுபறிநிலையில் இருந்து வருகின்றது.

இதுகுறித்து, குறித்த ஓய்வுபெற்ற அதிபர் தனது ஓய்வூதிக் கொடுப்பனவைப் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதிலும்கூட, யாழப்பாணம் கல்வித் திணைக்களம் மற்றும் திருகோணமலையிலுள்ள மாகாண கல்வி அமைசசு ஆகியவற்றில் பணிபுரியும் அரச அதிகாரிகளின் அசமந்தப்போககினால் ஓய்வூதியக் கொடுப்பனவை இன்னமும் பெறமுடியாத நிலையே காணப்படுகின்றது.

தனது ஓய்வூதியக் கொடுப்பனவு பெறுவதற்கு ஏதுவாக 23.07.97இல் இருந்து 22.7.98 வரையிலான காலத்தில் நீடித்த சேவையில் இருந்தமைக்கான உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் ஒன்றினை வழங்கும்படி சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுவந்துள்ள போதிலும்கூட, குறித்த கடிதத்தினை இதுவரை வழங்காமல் இருந்துவருகின்றனர். இந்த ஆவணம் இல்லாமல் இவருக்கான பூரணப்படுத்தப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்குவதில் ஓய்வூதியத் திணைக்களம் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது.

இதேசமயம், கடந்த ஏழு வருடங்களாக வழங்கப்படாமல் இருக்கும் தனது ஓய்வூதியத்தைக் கிடைக்க உதவி செய்யும்படி இந்த அதிபர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார் என்பது குறிபபிடத்தக்கதாகும். (ப-16)

# கிரேக்க அரசு இலங்கைக்கு தொடர்ந்தும் உதவி வழங்கும்

### கிரேக்க தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு நிவாரண முயற்சியில் தொடர்ந்தும் உதவப்போவதாக கிரேக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மனிதாபிமான உதவிகளையும், போக்குவரத்து விமானங்களையும் வழங்கப்போவதாக இலங்கைக்கான கிரேக்கத் தூதுவர் ஸ்றானிஸ்றோஸ் கிலாசூஸ் தெரிவித்தார்.

அவசர அபிவிருத்தி நிதி உதவியாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் யூரோ தொகை இலங்கை அரசாங்கத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

கிரேக்கத்தைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் கிழக்கில் நிவாரண விநியோகப் பணிகளை மேற்கொண்டுவருகின்றன.

திருகோணமலையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு பொருட்களை ஏற்றிச் செல்வதற்காகப் பாரிய கப்பல் ஒன்றை அனுப்பிவைக்கவும் கிரேக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் கப்பலில் விசேட நிபுணர்கள் உள்ளிட்ட 10 மருத்துவர்கள் இலங்கையை வந்தடையவுள்ளனர். (ற)

# கத்தோலிக்க ஒன்றியத்தினரால் சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில சுனாமிப் பேரலை அனர்த்தங்களால் சைக்கிள்களை இழந்தவர்களுக்கு யாழ். கத்தோலிக்க ஒன்றியம் புதிய சைக்கிள் வண்டிகளை வழங்கிவருகிறது.

அமெரிக்காவில் வசித்து வரும் அருட் திரு.தர்மபாலன் அடிகளாரின் நிதியுதவியுடன் யாழ். கத்தோலிக்க ஒன்றியம் இச் சைக்கிள்களை வழங்கிவருகிறது.

இவ் அமைப்பு 250 சைக்கிள்களை இதுவரை வழங்கியுள்ளது.

அடுத்த கட்டமாக பருத்தித்துறைப் பகுதியிலுள்ள கொட்டடி முனை, தும்பளை ஆகிய பிரதேசங்களுக்கு சைக்கிள்களை வழங்கவுள்ளது.

அத்துடன் வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாசப் பணியாளர்களுக்கும் இவ்வாறு சைக்கிள்கள் வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-35)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வள்ளுவர் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது போஷகராக கிருஷ்ணன் துரைசிங்கம், தலைவராக சண்முகம் மோகனகுமார், உபதலைவராக இரத்தினசிங்கம் மோகனராஜ், செயலாளராக சின்னத்தம்பி கிருஷ்ணன் நவரட்ணம், உப செயலாளராக கந்தையா சிறிதரன், பொருளாளராக சோமசுந்தரம் சோபனதாஸ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ற)

# இனக்கலவரங்களில் பாதிப்புற்றோருக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற இனக்கலவரங்களின போது பாதிப்படைந்தோருக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

கடந்த 1981ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் நாடு முழுவதிலும் இடம்பெற்ற இன வன்செயல்களில் பாதிப்படைந்தோருக்கே முதற்கட்டமாக நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அறிவுறுத்தல்களுக்கு அமையவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி காலப்பகுதியில் இடம்பெற்ற் இனக்கலவரங்களில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீட்டுத் தொகைகளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை நிவாரணம மற்றும் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

இந் நஷ்டஈட்டுக்காக விணணப்பித்தோரின் விண்ணப்பப் படிவங்களைப் பரிசீலிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இனக் கலவரங்களினால் பாதிப்புற்று நஷ்டஈட்டுக்காக விணணப்பிக்கப்படும் சகலரது விண்ணப்பப்படிவங்களும் பாாசீலணைக்கு எடுத்துக்கொள்ளபபடுமென அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

## விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விவசாயப் பீடத்தில் கல்வி பயிலும் அனைத்து வருட மாணவர்களுக்குமான விரிவுரைகள் எதிர்வரும் 7ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

அன்றைய தினமே இவ்வாண்டுப் புதிய வருட மாணவர்களுக்குமான அறிமுக வகுப்புகளும் இடம்பெறுமென விவசாயபீட பதிவாளர் தெரிவித்துள்ளார். (ற-95)

# கோப்பாய் பொலிஸார் திடீர் வேட்டைகளில் பெருமளவு சட்டவிரோத மதுபானங்கள் மீட்பு

## அவற்றை வைத்திருந்த 4 பேர் கைது

கோப்பாய் பொலிஸார் மேற் கொண்ட திடீர் தேடுதலின் போது ஒரே நாளில் பல்வேறு இடங்களில் கள்ளச் சாராயங் களுடன் பலர் கைது செய்யப் பட்டனர்.

கடந்த 30ஆம் திகதி உரும் பிராய் அன்னங்கைப் பகுதியில் தேடுதல் நடத்திய பொலிஸார் அங்கு 8றாம்ஸ் கசிப்புடன் ஒருவரைக் கைதுசெய்தனர்.

இதேபோல் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் 90 போத் தல் அரச சாராயத்தை அனுமதி யின்றி விற்றதன் காரணமாக ஒருவரும் அதே இடத்தில 3 போத் தல் அரச சாராயத்தை அனு மதியின்றி வைத்திருந்ததன் காரணமாக வேறு ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

இதேபோல் செம்மணி பாதை சதுப்பு நிலத்தில் பற்றைக்குள் கசிப்பு காச்சிக்கொண்டிருந்த பொழுது 240 றாம்ஸ் கசிப்பு டனும் 2ஆயிரத்து 450 றாம்ஸ் கோடா மற்றும் கசிப்பு காய்ச் சுவதற்கான உபகணரங்களு டனும் அரியாலையைச் சேர்ந்த நபர் ஒருவர் கைதுசெய்யப்பட் டார்.

கோப்பாய் பொலிஸ் பொறுப் பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தலைமையிலே சென்ற குழுவே இவ்வாறு திடீர் வேட்டையில் ஈடுபட்டவர்கள். (ப-74)

## ஜப்பான் நடத்திய போட்டியில்

# யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கு முதலிடம்

ஜப்பானிய அரசால் இலங் யில் நான்கு தொழில் நுட்ப வலயத்திற்கிடையே தொழில் திறன் போட்டிப் பரீட்சை இடம் பெற்றது. இதில் குறிப்பாக வட, கிழக்கு மட்டத்தில் இடம் பெற்ற மூன்று தொழில்திறன் பரீட்சையில் வலயம் 4ஐ கொண்ட யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத் தில் வெற்றி பெற்றுள்ளார்கள்.

இவர்களுக்கான தேசிய மட்ட தொழில்திறன் பரீட்சை எதிர்வரும் 08ஆம் திகதி மாத் தறையில் இடம்பெறும்.

இதில் வெற்றியீட்டிய மாண வர்களான சண்முகநாதன் சுரேஸ் குமார் முனியாண்டி-ரசிகுமார், நாகலிங்கம்-லுகசாந்தன் ஆகி யோர் இதில் கலந்து கொள்ள வுள்ளனர் என யாழ்.தொழில் நுட்பக்கல்லூரி அதிபரால் தெரி விக்கப்பட்டது. (ப-95)

# வெளிநாடுகளின் நிவாரணத்தில் காலாவதியான உணவுப்பொருட்கள்

(கொழும்பு)

ஆழிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக் கென வெளிநாடுகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற உணவுப்பொருட் களில் காலாவதியான உண வுப் பொருட்களும் உள்ளதா கத் தெரிவிக்கப்படுகின்றது.

ரின்களில் அடைக்கப்பட்ட உணவு வகைகள் மற்றும் நூடில்ஸ், பிஸ்கட் என்பனவே காலவதியான உணவுப் பொருட் களாகக் காணப்படுகின்றன.

ஆழிப்பேரலையினால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு வழங்கு வதற்காக சுமார் 40ற்கும். மேற் பட்ட வெளிநாடுகளிடமிருந்து நிவாரண உணவுப் பொருட்கள் கிடைத்தன. இவ்வாறு கிடைத்த உணவுப் பொருட்களில் சந்தே கத்திற்கிடமான உணவுப்பொருட் கள் வைத்திய ஆராய்ச்சி நிலை யத்துக்கு அனுப்பப்பட்ட போது சில உணவுப் பொருட்கள் காலா வதியானவை எனக் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன.

இந்த உணவுப் பொருட்க ளின் முத்திரைகளில் உள்ள விடயங்களை இனங்காண முடி யாமல் உள்ளதினால் இப் பொருட்களை நிவாரணத்துடன் வழங்குவதில் பிரச்சினைகள் தோன்றுவதாக மாவட்ட செய லாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது வெளிநாடுகளிட மிருந்து கிடைக்கப்பெற்றுள்ள உணவுப் பொருட்களில் சந்தே கத்தற்கிடமான உணவுப் பொருட் கள் விநியோகம் செய்யப்படா மல் நிறுத்தி வைக்கப்பட்டுள் ளதாக சமூக நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது. (ற-8)

# பல்கலை ஊழியர்கள் மீண்டும் போராட முடிவு

நாடுமுழுவதும் அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரிய/ஊழி யர்களுக்கான சம்பள முரண் பாடுகள் தீர்த்து வைக்கப் படாததைத் தொடர்ந்து எதிர் வரும் 21ஆம் திக்தி முதல் தொழிற்சங்க நடவடிக்கை யில் ஈடுபடப் போவதாக பல் கலைக்கழக ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டுக்குழு தீர் மானித்தது.

இத் தொழிற்சங்க நடவடிக் கையின் வடிவம் பின்னர் அறி விக்கப்படும் என நாடளாவிய தொழிற்சங்க சம்மேளன இணைப் பாளர் லயன்ஸ் மல்வத்த யாழ். பல்கலைக்கழக ஊழியர்சங்க இணைப்பாளர்க்கு அறிவித்துள் ளார். (ப-95)

## குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின்

# உதவிக் கட்டுப்பாட்டாளர் கைதாகி பிணையில் விடுதலை

குடிவரவு, குடியகல்வுத்திணைக் களத்தின் உதவிக் கட்டுப்பாட் டாளர் ஒருவர் லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளினால் கைது செய்யப் பட்டுள்ளார்.

31இலட்சம் ரூபாவினை சட்ட விரோதமாகச் சேகரித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கொழும்பு மேல் நீதிமன்றில் பிரதம நீதிவான் சறோஜினி குசல்லவா வீரவர்த் தன முன்னிலையில் ஆஜர் செய் யப்பட்டபோது, 15 இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் 10ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் செல்வ தற்கு அனுமதிக்கப்பட்டார்.

நீதிமன்றத்தின் அனுமதியி ன்றி வெளிநாடு செல்லக்கூடாது என்றும், கடவுச்சீட்டை ஒப்படைக் குமாறும் நீதிவான் அவருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் அதிகா ரம் பெற்ற அதிகாரியாக இவர் கடமையாற்றிய போது சட்ட விரோதமாகச் சொத்துக்களை யும், உடமைகளையும் சேர்த் தார் எனவும் இவர்மீது உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக் கல் செய்யப்படவுள்ளது.(ற-8)

### திருட்டு

சங்கானை-வல்லை வீதியிலுள்ள துவிச்சக்கர வண்டி திருத்தகம் ஒன் றில் நின்ற துவிச்சக்கர் வண்டி யொன்று பட்டப்பகலில் திருடப் பட்டுள்ளது.

மேற்படி துவிச்சக்கர வண்டி திருத்தக உரிமையாளர் பொறுப் பேற்றுக் கொண்ட துவிச்சக்கர வண்டியை ஓரமாக நிறுத்தி விட்டு மற்றோர் துவச்சக்கர வண்டியை திருத்தும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுதே இந்த திருட்டு நிகழ்ந்துள்ளது. (ப-49)

# காபுல்லேஸ் நிறுவனத்தை மீள இயக்க நடவடிக்கை

## ஒத்துழைப்பதாக நிதியமைச்சர் உறுதி

(கொழும்பு)

காபுல்லேஸ் நிறுவனத்தைக் கூடிய விரைவில் மீள இயங் கச்செய்யும் முயற்சிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப் போவதாக நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரி வித்துள்ளார்.

இதனைத் துரிதமாகத் தொடங் குவதுபற்றி பேசுவதற்காக நேற்று முன்தினம் கொழும்பில் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது.


இந்தக் கூட்டத்தில் கம்ப னிகளுக்கு இடையிலான ஊழி யர் சங்கத்தின் பிரதிநிதிகளும், காபுல்லேஸ் நிறுவனத்தின் தொழிற்சங்கப் பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.

முந்தைய நிர்வாகம் இந் நிறுவனத்தின் உடைமைகளை மக்கள் வங்கியில் ஈடுவைத் துப் பெருமளவு தொகையை கடனாகப் பெற்றுள்ளது இந்தக் கடன்தொகை திருப்பிச் செலுத் தப்படவில்லை.

இதன் பிரகாரம் காபுல்லேஸ் நிறுவனத்தின் சொத்துக்கள் மக்கள் வங்கிக்குச் சொந்த மாகியுள்ளது. வங்கியின் அதி காரிகளுடன் உடன்பேசி இப் பிரச்சினைக்கு தீர்வு காணப் படும்என நிதிஅமைச்சர் சரத் அமுனுகம உறுதியளித்துள் ளார். (ற)

## சுனாமி அனர்த்த நிவாரண நிதிக்கு

# ஒன்ரோறியோ முது தமிழர் மன்றம் 9000 டொலர் நிதி பங்களிப்பு





(ஒன்ரோறியோ)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கனடா கிளை திரட்டி வரும் சுனாமி அனர்த்த நிவாரண நிதிக்கு ஒன்ரோறியோ முது தமிழர் மன்றம் 9,000 டொலர்களை பங்களிப்பு செய்துள்ளது. இதற்கான காசோலையை மன்றத்தின் தலைவர் எம்.வேலாயுத பிள்ளை, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கனடா கிளைத் தலைவர் இரா.குணநாதனிடம் கடந்த புதன்கிழமை மன்றப் பணிமனையில் வைத்துக் கையளித்தார். இந்தத் தொகை மன்ற உறுப்பினர்களிடமிருந்தும் நலன்விரும்பிகளிடமிருந்தும் திரட்டப்பட்டது.

மன்றத் . தலைவர் வேலாயுதபிள்ளை பேசும் போது, மன்ற உறுப்பினர்கள் காட்டிய ஆர்வம் முயற்சி காரணமாகவே இந்தப் பெரிய தொகையை திரட்ட முடிந்தது எனக் குறிப்பிட்டார்.

தாயகத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் களின் துயர்துடைக்க சிறப்பாக செயல்பட்டு வரும் கனடா தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியைப் பாராட்டினார். இரா.குண நாதன் அங்கு பேசும் போது, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது செயற்பாடுகளை மிகவும் நேர்மையோடும் அர்ப்பணிப்போடும் திறமையோடும் செய்து வருகிறது.

இதுவரை 10 இலட்சம் டொலர்களை தாயக தமிழர் புனர்வாழ் வுக் கழகத்துக்கு இது அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தப் பெரிய தொகையைத் திரட்ட பங்களித்த முது தமிழர் மன்றம் உட்பட்ட அனைத்து புரவலர்களுக்கும் அமைப் புக்களுக்கும் அவர் தனது நன்றியைத் தெரிவித்தார். (ற)

# பிரதேச செயலாளரை இடமாற்ற கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவின் புதிய பிரதேச செய லாளரை இடம்மாற்றுமாறு கோரி பொதுமக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடாத்தியுள்ளனர். பிரதேச செயலகத்துக்கு முன் னால் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு காலை 10.30 தொடக்கம் 11.30மணிவரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டோரை பிரதேச செயலக வளா கத்துக்குள் செல்லவிடாமல் பொலிஸார் தடுத்தனர்.

அலுவலக வாசலில் வைத்து மகஜரைப் பெற்றுக்கொண்ட மாவட்ட அரச அதிபர் பி.சண் முகம், மக்களின் எதிர்ப்பு விட யத்தை பொதுநிர்வாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிப்ப தாகத் தெரிவித்தார்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த வன்னி மாவட்ட நடாளு மன்ற உறுப்பினர்களான சிவ நாதன் கிஷோர், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோநோதாரலிங் கம் மற்றும் வன்னிமாவட்ட புனர்வாழ்வு அமைச்சரின் வவு னியா இணைப்பாளர் ஜனாப் அனாப் ஆகியோருக்கும் மக ஜர்கள் கையளிக்கப்பட்டுள் ளன. (த-8)

# மனப் பதற்றம் நீங்கி மகிழ்ச்சியாய் வாழ்வோம்

போட்டிகளும், பூசல்களும் அதிகரித்துவரும் காலகட்டத்தில் இயல்பாகவே மனிதனுக்கு பல்வேறு மன பாதிப்புகள் ஏற்படுகின்றன.

மாறிக்கொண்டேவரும் சூழ்நிலைகளை சமாளிக்க இயலாத நிலையில் மன உளைச்சல் உண்டாகிறது.

பொதுவாக நம் மக்களில் 10 சத்தினருக்கு மனப்பதற்றம் இருப்பதும், 5 சதம் மக்களுக்கு மனச் சோர்வு உள்ளதும் தெரிவிய வருகிறது.

ஒருவருக்கு மன பாதிப்பு உள்ளதா? என்பதைக் காண்பது முக்கியம். மன பாதிப்பு உள்ளவர் என்றால் "பைத்தியம்' பிடித்தவர் என்கிற தவறான கணிப்பு இருப்பதால், அதையாரும் ஏற்றுக் கொள்வதில்லை.

இந்த அறிகுறிகளில் பல உங்களிடமோ அல்லது மற்றவரிடமோ இருந்தால் மனப் பதட்டம் உள்ளது என அறியலாம்.

தொடர்ந்து நீடிக்கும் கவலை, காரணமில்லாமல் எந்தச் செயலிலும் கவனம் செலுத்த இயலாமை, மகிழ்ச்சியில்லாத மன நிலை, அடிக்கடி கோபப்படுதல், தூக்கமின்மை, அடிக்கடி மனச் சோர்வடைதல், பிறரை வெறுதல், வழக்கத்திற்கு மாறான சிறு மாற்றம் ஏற்பட்டாலும் மனம் உடைதல், காரணமின்றி பயப்படுதல், தன்னைத் தவிர மற்றவர்கள் யாரும் சரியில்லை என எண்ணுதல், காரணமிறன்றி உடலில் ஆங்காங்கே வலி ஏற்படுதல், வெளியில் சொல்ல இயலாத குழப்பம், எல்லாநேரங்களிலும் மனதிற்குள் பயம், ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிடுமோ என்ற உணர்வு, நிலைமை கட்டுக் கடங்காது போய்விட்ட பிரமை, எதற்கெடுத்தாலும் கோபப்படுதல், வெளியில் பயணம் செய்தால், விபத்து நேருமோ என்ற அச்சம், சிறு பிரசசினைக்குக் கூட தீர்வுகாண இயலாமல் குழப்பமடைதல்.

## உடலளவில் காணப்படும் அறிகுறிகள்

கை,கால்கள் நடுங்குதல், உடல் வியர்த்தல், நெஞ்சில் படபடப்பு, நெஞ்சுவலி, மூச்சிறைதல், தலைவி, தலைச்சுற்றல், வயிற்று வலி, வயிறு புரட்டுதல், வயிற்றுப் போக்கு, அடிக்கடி சிறுநீர் கழித்தல், படுத்தவுடன் தூக்கமில்லாமல் புரளுதல், தூங்கும்போது சிறு சத்தம் கேட்டாலும் திடுக்கிட்டு விழித்துக் கொள்ளுதல், தீய கனவுகள்: (தன்னை யாரோ கொலை செய்யத் துரத்துவது? போல, சுடுவது போல, உயரமான இடத்திலிருந்து தள்ளிவிடுதல் போன்ற), உடல் தளர்தல், எளிதில்களைப் படைதல் கவனம் செலுத்த இயலாமை, சரிவர சாப்பிட இயலாமை, உடல் எடைகுறைதல்.



இவை யாவும் மனப் பதட்டத்தின் விளைவுகளாகும்.

## யாருக்கு பாதிப்பு அதிகம்?

அதிகம் உணர்ச்சிவயப்படுபவர்கள், அதிகம் மனச்சாட்சி கொண்டவர்கள், கடினமாக உழைக்க எண்ணுபவர்கள், சுறுசுறுப்பானவர்கள், சராசரி மனிதனைவிட புத்திசாலிகள் ஆகியவர்களிடம மனப் பதட்டம் உள்ளது. மேலும் பெற்றோர்கள், அதிக பதட்டமடை பவர்களாக இருந்தால் பிள்ளைகளுக்கும் வரலாம்.

இளமையில் வறுமையால் பாதிக்கப்பட்டவர்கள்: காதலில், தொழிலில் மற்றும் திருமண வாழ்வில் தோல்வி அடைந்தவர்கள்; வெளி உலகிற் நல்லவர்களாக-பெரிய அந்தஸ்து உள்ளவர்களாகக் காட்சி கொடுத்துக்கொண்டு, கொலை, கொள்ளை, விபச்சாரம் போன்ற தீய செயல்களில் ஈடுபடுபவர்கள் அல்லது அவற்றிற்கு உடந்தையாயிருப்பவர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்கள் போன்றவர்களுக்கு மனப் பதட்டம் உண்டாகும்.

தான் விரும்புவதை செய்ய முடியாத சூழ்நிலை உண்டாகும் போது, அல்லது தமக்கு விருப்பமில்லாத செயலைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும் போது மனப் பதட்டம் உண்டாகும்.

சிலருக்கு வாழ்க்கையில் நடந்த அதிர்ச்சியான சம்பவங்கள் (திடீரென்று எதிர்பாராது நிகழும் மரணம், விபத்து, பொருளிழப்புகள்) நினைவிற்கு வரும்போது மனப் பதட்டம் உண்டாகும்.

## மனப் பதற்றம் எப்படி உருவாகிறது?

மனதில் பயமான எண்ணங்கள் வளர்ந்து, தன்னம்பிக்கை குறையும்போது மனப் பதட்டம் உருவாகிறது. பொதுவாக குறைந்தபட்ச பய உணர்வு அவசியம். பய உணர்வினால் தான் மனிதன் எச்சரிக்கையாக செயல்பட முடிகிறது. மென்மேலும் முன்னேற முடிகிறது. குறைந்தபட்ச பய உணர்வு சாலையில் உள்ள வேகத்தடைகள் போன்றது. நம்மை, வாழ்க்கை என்ற பயணத்தில் நிறுத்தி- நிதானித்து செயல்பட வைக்கிறது.

பய உணர்வு அளவிற்கதிகமானால்- மனப் பதட்டமாக மாறுகிறது. இந்த நிலையில் மேலே குறிப்பிட்ட அறிகுறிகள் வெளிப்படும். இந்த நிலையில் அதை உணர்ந்து கொண்டால், அதிலிருந்து முழுவதும் குணம் பெறலாம்.

எப்போதாவது முக்கியமான சம்பவத்தின் போது மனப் பதட்டம் உண்டாவது இயற்கைதான். அது தற்காலிகமானது. ஆனால சிலருக்கு சிறு சிறு சம்பவங்களிலும் இது போன்ற பதட்ட உணர்வுகள் இருந்தால் செயல்களில் பாதிப்பு உண்டாகும்.

## பயத்தைப் போக்குவது எப்படி?

மனிதனுக்கு ஆறு வகையான பய உணர்வுகள் உள்ளன என நெப்போலியன் ஹில் கூறுகிறார்.

அவை: வயதாகி விடுமோ? இறப்பு வருமோ? வறுமை வந்துவிடுமோ? நோய் வந்து விடுமோ?, நேசிப்பவரின் அன்பை இழக்க நேருமோ? பிறர் குறை சொல்லி விடுவார்களோ? என்பனவாகும்.

இவற்றில், வயதாகும் என்பது யாரும் தடுக்க இயலாதது. சுறுசுறுப்பான, ஆர்வமான செயல்களின் மூலம் முதுமை உணர்வை குறைக்கலாம்.

இறப்பு என்பதும் இயற்கையான செயல்.

கடின உழைப்பும், திட்டமிட்ட செயலும் இருந்தால், வறுமையைப் பற்றிய பயம் வேண்டியதில்லை.

தகுந்த உடற்பயிச்சிகளும், பழக்கவழக்கங்களும் இருக்குமானால், நோய் வந்தாலும் முறையான மருத்துவ சிகிச்சையின் மூலம் நலமாக வாழலாம். ஒரு செயல் நியாயமானதாக இருந்து- அது மற்றவர்களின் உரிமைகளில் தலையிடாதபோது- மனசாட்சிக்கும் ஏற்புடையதாக இருக்குமானால், நேசிப்பவரின் அன்பை இழக்க நேரிடுமோ என்றோ- பிறர் குறைசொல்வார்களோ என்றோ பயப்படத்தேவையில்லை.

நாம் எதிர்பார்ப்பது நிகழாத போது ஏமாற்றம் உண்டாகிறது. ஏமாற்ற உணர்வுகள் தொடரும் போது மனம் சோர்வடைகிறது.

காரணம் ஏதுமில்லாமலும்

டாக்டர். ஜி.ராமநாதன்

சிலருக்கு மனச்சோர்வு உண்டாகலாம். இதற்கு காரணம், நம் இரத்தத்தில் ஏற்பட்டுள்ள இரசாயன மாற்றங்கள்தான். சிலருடைய பெற்றோருக்கு மனச் சோர்வு இருந்தால், வரிசுகளுக்கும் வரும் வாய்ப்புகள் உண்டு.

மனச்சோர்வின் போது உடலின் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் அதன் வெளிப்பாடு இருக்கலாம். உதாரணமாக,

தீராத தலைவலி, கழுத்து வலி, மலச்சிக்கல், இடுப்பு வலி, கை, கால்களில் வலி, உடலில ஊர்வது போன்ற பிரமை போன்றவை வெளிப்படலாம். இது போன்றவர்களுக்கு பரிசோதனை செய்தால் உடலில் எந்த உறுப்புகளிலும் பாதிப்புகள் இராது. சிகிச்சையிலும் எதிர்பார்த்த முன்னேற்றம் வராது. தகுந்த மனநல ஆலோசனைகள் மூலமே குணம் பெறமுடியும்.

காரணமில்லாமல் சோகமடைதல், காரணமில்லாமல் அழுதல், பிறரைப் பார்த்து எரிச்சலடைதல், வழக்கத் திற்கு மாறான மனப் பதட்டம், கோபம, பசியின்மை அதைத் தொடர்ந்து உடல் எடைக் குறைவு (மிகச் சிலருக்கு அளவிற்கதிகமான பசியும் உண்டாகலாம்) தூக்கமின்மை, எந்த வேலையும் செய்யாமலேயே உடல்சோர்வடைதல், எதிலும் கவனம் செலுத்த இயலாமை; ,முடிகெடுகக இயலாமை, எந்தப் பொறுப்பையும் ஏற்க இயலாமை, தன்னைத்தானே நொந்து கொள்ளுதல, வெளியில் சொல்லமுடியாத குறைகள் இருப்பது போன்ற உணர்வுகள், மரணம் பற்றிய எண்ணம் அடிக்கடி தோன்றுதல, தற்கொலை செய்து கொள்ள தோன்றும் உணர்வுகள், சோகமான சூழ்நிலையிலும் அழ இயலாமை, மகிழ்சியான சூழ்நிலையிலும் சிரிக்க இயலாமை, யாரும் செய்யாத தவறை செய்து விட்டு போன்ற தவறான நம்பிக்கை, தம்மை பிறர் கொடுமைப்படுத்துவது போன்ற எண்ணம், எல்லாம் நேரங்களிலும் தனிமையையே விரும்புதல, சத்தத்தை கேட்டால் தாங்க முடியாமை போன்ற அறிகுறிகள் தோன்றுகின்றன.

ஓரிரு நாட்கள் இது போன்ற மனமாற்றங்கள் இருந்தால் அவை தற்காலிகமானதுதான். பல மாதங்கள் வரை நீடித்தால் அது மனப் பாதிப்பின் விளைவு என்பதை உணர வேண்டும். இதற்கு மருத்துவ சிகிச்சை, மின அதிர்ச்சி சிகிச்சை, மனோதத்துவ சிகிச்சை போன்ற கூட்டு சிகிச்சை முறைகள் மூலம் நிவாரணம் பெறலாம்.

# வவு.இல் நெருப்புக் காய்ச்சல் வேகமாகப் பரவுகிறது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நெருப்புக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாகவும், இதனால் மக்களை விழிப்பாக இருக்குமாறும் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

வவுனியா நகரை அண்டிய பிரதேசங்களில் இந்த நோய்ப் பாதிப்பு அதிகளவில் இனம் காணப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 14 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் வரை மொத்தமாக 72 பேர் இந்த நோயின் தாக்கத்திற்கு இலக்காகியுள்ளதாக இனம் காணப்பட்டுள்ளனர்.

இந்த நோய்த்தொற்றுக்கு குடிநீரே பிரதான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொதித்தாறிய நீரையே பருகுமாறும, கிணறுகளுக்கு குளோரீன் இடுமாறும், தேவையேற்படும் பட்சத்தில் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் பொது மக்களுக்கு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ற-9)

# துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 23 வது ஆண்டு நிறைவு விழா

(பொன்னாலை)

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 23வது வருட நிறைவும்- பரிசில் வழங்கும் வைபவமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

துர்க்கா மகளிர் இல்லத் தலைவி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இந் நிகழ்வு நடைபெறும்.இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரி கத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் கலந்து கொள்கிறார்.சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கலந்து கொள்கிவார். (ப-49)

# நற்செய்திக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார் பண்ணை மெதடிஸ்த திருச்சபையின் 83வது ஆண்டு விழாவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் நற்செய்திக் கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு வண்ணார் பண்ணை மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் விசேட செய்தியாளராக கல்வாரி பூரண சுவிசேஷ திருச்சபையைச் சேர்ந்த எல்.ஜி. லெஸ்லி மத்தியூஸ் கலந்து கொள்ளவுள்ளார்: (ற)

# பொதுக் கூட்டம்

(பொன்னாலை)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப் பொதுக் கூட்டத்தில் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டப்பட்டுள்ளது. (ப-49)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு தமிழர்புனர்வாழ்வுக்கழகம் உதவித் தொகை வழங்கும்

ஆழிப்பேரலையின் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பித்துள்ளது.

முதற்கட்டமாக, இத்திட்டத்தில பொத்துவில், திருக்கோவில பிரசேத செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் 66 பேருக்கு தமிழர் புனா வாழ்வுக் கழகம் இந்த உதவித் தொகையை வழங்கவுள்ளது.

தொடர்ந்தும் இத்திட்டம் தமிழர் தாயகப் பகுதியெங்கும் நடைமுறைப்படுத்தப்படும் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது. (ப-49)

# நிறுவைகள் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 9.30மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை யாழ். மாவட்ட செயலகத்தில் பரிசோதகரால் பரிசோதித்து முத்திரையிடப்படவுள்ளது.

மேற்படி உபகரணங்களுக்கு முத்திரையிடத் தவறிய சகல வர்த்தகர்களும் (ப.நோ.கூ.சங்கங்கள், சந்தை வியாபாரிகள் உட்பட) இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

மேலும் அதிகாரமளிக்கப்படாத அல்லது முத்திரையிடப்படாத (குறிப்பிட்ட 12 மாதங்களுக்குள்) நிறுவைகள், அளவைகள் உபகரணங்களை வர்த் தக நடவடிக்கைகளுக்குப் பயன் படுத்தும் அல்லது வர்த்தக நிலையத்தில் வைத்திருக்கும் வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. -(ற)

# மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை முழுநேரமும் இயங்கத் தொடங்கியுள்ளது

(திருநெல்வேலி)

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை தற்போது முழுநேரமும் இயங்கத் தொடங்கியுள்ளது.

முன்னர் வெளிநோயாளர் பிரிவு மட்டுமே இயங்கி வந்தது.

தற்யோது இவ் வைததியசாலை கிளிநொச்சி மாவட்டதுடன் தற்காலிகமாக இணைக்கபபட்டு முழுநேரமும் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதை அடுத்து இது முழுநேரமும் இயங்கத் தொடங்கியுள்ளது.

இவ் வைத்தியசாலை முழுநேரமும் இயங்கத் தொடங்கியதால் சுனாமி அனர்த்தத்தால் பாதிப்படைந்து நலன் புரிநிலையங்களில் தங்கியுள்ள மக்கள் பெரும் நன்மை அடைந்து வருகின்றனர்.

இதேவேளை, இப்பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில் விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவினரும் பணியாற்றி வருகின்றனர். (ற-43)

# மீள்குடியமர நடவடிக்கை எடுக்கக் கோரி யாழ்.செயலகம் முன்பாக தொடர் மறியல் போராட்டம்

(திருநெல்வேலி)

தென்மராட்சியில் உள்ள பொது அமைப்புகள் ஒன்றிணைந்து யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் தொடர் மறியல் போராட்டத்தில் ஈடுபடப்போதாக அறிவித்துள்ளனா.

தென்மராட்சிப் பகுதியில் ப்டையினா அமைத்துள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி தம்மைத் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்குமாறு கோரியே இப்போராட்டம் நடாத்தப்படவுள்ளது.

இப போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமனற உறுப்பினா்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-43)

# க. பொ. த. உயர்தரப் பரீட்சை ஏப்ரலுக்குப்பின் ஒரேதடவையில்

எதிர்வரும் ஏப்ரலில் நடைபெறவுளள க.பொ.த. உயர்தரப பரீட்சையை ஒரே தடவையில் நடத்திமுடிக்க ஜனாதிபதி இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் இந்த இணக்கத்திற்கு ஜனாதபதி வந்தார் எனக் கூறப்பட்டது.

இரண்டு தடவைகள் தனித்தனியாக உயர்தரப் பரீட்சை நடத்துவதனால் ஏற்படும் சட்டச் சிக்கல்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கான புள்ளிகளைத் தீர்மானிப்பதில் எழக்கூடிய பிரச்சினைகள் என்பவற்றை ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

அதனை அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவும் ஏற்றுக் கொண்டதனால் உடனடியாக இவ் விடயத்தைக் கவனத்தில் எடுத்து எதிர்வரும் ஏப்ரல மாதத்தின் பின் வேறொரு தினத்தில் பரீட்சையை நடத்த ஜனாதிபதி இணங்கினார் எனத தெரியவருகிறது.

க.பொ.த.உயர்தரப் பரீட்சையை நாடு முழுவதும் ஏப்ரலில் நடத்தவும் ஆழிப்பேரலை அனரத்தப் பாதிப்புகளுக்கு உள்ளான பகுதிகளிலுள்ள மாணவர்களுக்குப் பின்னர் பிறிதொரு திகதி யில் இப்பரீட்சையைத் தனியாக நடத்தவும் அரசு முனனர் தர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## மெய்வல்லுநர் போட்டி

ஏழாலை மேற்கு சைவசன் மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் செ.சிவநடராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இப் போட்டிக்கு முதன்மை விருத்தினராக உடுவில் கல்விக்கோட்டப்பணிப்பாளர், செ.குபேரநாதனும் சிறப்பு விருந்தினராக வலி.தெற்கு உதவி பிரதேச செயலர் செல்வி த.மஞ்சுளாதேவியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ப)

# சுனாமியால் 10 துறைமுகங்கள் செயற்திறன் அற்ற நிலையில்

(கொழும்பு)

ஆழிப் பேரலைகளினால் நாடு முழுவதிலும் உள்ள 15 துறைமுகங்களில் 10துறைமுகங்கள் முற்றாகச் செயற்திறன் அற்றுக் காணப்படுவதாகவும், சுமார் 19ஆயிரம் மீன்பிடிப் படகுகள் சேதமடைந்துள்ளதாகவும் 'நாரா' எனப்படும் தேசிய நீரியல் வள ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

நாடடின் மீன்பிடித்துறை மறறும் கடல்வளங்களுக்கு சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட சேதம்குறித்து மதிப்பீடு செய்து வருவதாகவும் நாரா நிறுவனம கொழும்பில் நேற்று முன்தினம நடாத்திய செய்தியாளா் மாநாட்டில் தெரிவித்துள்ளது.

இநத மதிப்பீடுகள் மீன்பிடித் துறையை மீளக் கட்டியெழுப்புவதற்குப் பெரும் முக்கியத்துவம் பெறுவதாகவும நாரா நிறுவனம மேலும் தெரிவித்துளளது. (ற-8)

# போகம்பர சிறையிலிருந்து 426 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று கண்டி போகம்பர சிறைச்சாலையில் இருந்து 426கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களில் 22பேர் பெண்களாவா.

சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் அடிப்படையில் சிறு சிறு குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். (ற-9)

# ஜப்பானிய நிறுவனத்தால் தொழில்நுட்ப பயிற்சிகள்

**பயில விரும்புவோருக்கு இன்று நேர்முகத்தேர்வு**

சுனாமியால பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஜபபானிய அரச ஆதரவுடன் யாழ்.தொழில்நுட்பக்கல்லூரியில் விசேட வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளது.

அதாவது கட்டட தொழில்நுட்பம், மரவேலை தொழில்நுட்பம், நீர்குழாய் பொருத்துனர், வீட்டு மின்னிணைப்பாளர், மின் உருக்கு ஒட்டுனர், குறுங்காலப் பயிர்செய்கையாளர் போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுளளன. விருப்பமான மாணவர்கள் இன்று காலை 9.00 மணிககுப் பினனர் நோமுகப் பரீட்சையில் கலந்து கொள்ளுமாறும இதில் 9ஆம் வகுப்பை பூர்த்தியடைந்தவர்கள கலந்து கொள்லாம் எனவும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபரால் தெரிவிக்கப்பட்டது. (ப-95)

# தடையில் இருந்து தப்பினார் இன்சமாம்

சாவதேச கிரிக்கெற் கவுன்சில் செய்த தவறினால தடையில் இருந்து தப்பினார் பாகிஸ்தான் கப்டன் இன்சமாம் உல ஹக். அவுஸ்திரேலியாவில் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெற் தொடர் நடக்கிறது.

கடந்த செவ்வாயன்று பாகிஸ்தான் மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் மோதின. இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி பந்துவீசி முடிக்க, நிர்ணயிக்கப்பட்டதைவிட அதிக நேரம் எடுத்துக்கொண்டது. இதற்காக கப்டன் இன்சமாம் உல்ஹக் போட்டி ஊதியம் முழுவதையும் அபராதமாக விதித்தார் ஐ.சி.சி.மேட்ச் ரெப்ரி கிறிஸ் பராட்.

கடந்த 12மாதங்களில் இந்தத் தவறை இன்சமாம் இரண்டாவது முறையாகச் செய்கிறார். ஐ.சி.சி .விதிகளின் படி



12மாதங்களுக்குள் கப்டன் இதேதவறைத் தொடரும் பட்சத்தில், அடுத்த போட்டியில் விளையாடும் தகுதியை அவர் தானாகவே இழக்கிறார்.

மேட்ச் ரெப்ரி, இன்சமாம் செய்த பழைய தவறைக்கவனிக்காததால், தப்பினார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் இறுதிப் போட்டியில் அவர் விளையாடலாம்.

ஐ.சி.சி.விதிமுறைகளின்படி இன்சமாம் உல்ஹக்கிற்கு நான் தண்டனை அறிவித்த போது, அவரது முந்தைய செயல்பாடுகளைக் கவனிக்கத் தவறிவிட்டேன். இது எனது தவறுதான். ஆனாலும், இந்த விவகாரம் இத்துடன் முடித்துக் கொள்ளப்படுகிறது. என்று தெரிவித்துள்ளாா கிறிஸ்பராட் மேட்ச் ரெப்ரி ஒருமுறை தண்டனை அறிவித்து விட்டதால் இன்சமாம் மீது திரும்ப ஒரு முறை நடவடிக்கை எடுக்க ஐ.சி.சி. விரும்பவில்லை. ஆகவே பிரச்சினையை இத்துடன் விட்டு விடுவதாக அறிவித்துள்ளது. (ற)

# பிரிமியர் கால்பந்து செல்சியா வெற்றி

பிரிமியர் லீக் கால்பந்து தொடரில் செல்சியா, பிளாக் பர்ன் ரோவர்ஸ் அணியை



வீழ்த்தியது. இதன் மூலம் செல்சியா அணி கோப்பையை வெல்வதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது.

முன்னணி கிளப் அணிகள் மோதும் பிரிமியர் லீக் கால்பந்துத் தொடர் இங்கிலாந்தின் பல்வேறு இடங்களிலும் நட்ந்து வருகிறது. கடந்த புதன்கிழமை நடந்த போட்டியில் செல்சியா, பிளாகபா்ன் கிளப்கள் மோதின. ஆட்டத்தின் ஐந்தாவது நிமிடத்தில் செல்ஷியாவின் அர் ஜென்ருபன் முதல் கோல் அடித்தார். இதை சமன் செயயப் போராடிய பிளாக்பர்ன் அணிக்கு இறுதியில் தோல்வியே மிஞ்சியது.

இந்த அணி 0-1 என்ற கோல் கணக்கில் செல்சியா அணியிடம் வீழ்ந்தது. இந்த வெற்றியின் மூலம் செல்சியா அணி சம்பியன் பட்டம வெல்லும் வாய்ப்பு அதிகரிததுள்ளது.


இத்தொடரில் 25போட்டிகளில் விளையாடி யுள்ள இந்த அணி, 64புள்ளிகள பெற்று முதல் இடத்தில் உள்ளது.

இரண்டாவது இடத்தில் உள்ளது. இதைவிட 11 புள்ளிகள் பின்தங்கிய நிலை யில் மான்செஸ்டர் யுனைடெட் (53) அணி இரண்டாவது இடத்தில் உள்ளது. நடப்பு சம்பியனான அர் செனல் 51புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திற்கு பின் தங்கி யுள்ளது. (ற)


# காலிறுதியில் எலினா

பான் பசுபிக் டென்னிஸ் தொடர் காலிறுதிக்கு எலினா டெமன்டீவா முன்னேறியுள்ளார்.

முன்னணி வீராங்கனைகள் பங்கேற்கும் பான் பசுபிக் டெனிஸ் தொடர் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற மோதல்களில் ரஷ்யாவின் எலினா டெமன் டீவா 6-2, 6-2, என்ற நேர்செட்களில் ஜப்பான வீராங்களை அகிகோ மோரி கமியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். (ற)



**விளையாட்டு செய்திகள்**



நியூசிலாந்தில் உள்ள கிறைஸ்ட்சர்ச்சில் நேற்று முன்தினம் கண்காட்சி டென்னிஸ் போட்டி நடைபெற்றது. இதில் அமெரிக்காவின் மார்டினா நவரத்திலோவா 4-6, 6-2, 6-4 என்ற செட்களில் சக வீராங்கனையான மோனிகா செலசை வீழ்த்தினார்.

# சவுதி அரேபியா - எகிப்து நாடுகளில் ஜனநாயக ஆட்சி ஏற்பட வேண்டும்

## -அமெ.ஜனாதிபதி புஷ்



(வோஷிங்டன்)

சவுதி அரேபியா - எகிப்து நாடுகளில் ஜனநாயக ஆட்சி ஏற்பட வேண்டுமென அமெரிக்க ஜனாதிபது புஷ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற இரு சபைகளின் கூட்டு கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி புஷ் இவ்வாறு கூறினார்.

ஈராக், பாலஸ்தீனம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் சமீபத்தில் தேர்தல் நடந்து முடிந்துள்ளன. மொராக்கோவில் இருந்து ஜோர்டான், பக்ரைன் வரை சீர்திருத்தம் ஏற்கனவே தொடங்கிவிட்டது.

மேற்கு ஆசியாவில் உள்ள நமது அணியைச் சேர்ந்த நாடுகளான சவுதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகள் தங்கள் மக்களுக்கு கூடுதல் சுதந்திரம் வழங்கவேண்டும். அந்த நாடுகள் ஜனநாயக ஆட்சிமுறைக்கு விரைவில் மாறவேண்டும்.

மத்திய கிழக்கில் அமைதி ஏற்பட வழிகாண்பித்த எகிப்து, மத்திய கிழக்கில் ஜனநாயகத்துக்கு திரும்பும் பாதையைக் காட்டவேண்டும்.

மத்திய கிழக்குப் பகுதியில் அமைதியை நிலைநாட்டத் தொடர்ந்து தீவிரவாதிகளை ஆதரிக்கும் நாடுகளுடன் போராட வேண்டியிருக்கிறது. சிரியா தன் பகுதியையும், லெபனானின் ஒரு சில பகுதிகளையும் பயன்படுத்திக்கொள்ள தீவிரவாதிகளை அனுமதித்து வருகிறது.

சிரிய அரசாங்கம் தீவிரவாதிகளுக்கு ஆதரவளிப்பதை கைவிட்டு விட்டு, சுதந்திரத்துக்கு கதவைத் திறந்து விடவேண்டும்.

இன்று தீவிரவாதத்துக்கு ஊற்றுகணணாக இருக்கும் ஈரான், அணு ஆயுதம் தயாரிப்பதல் தீவிரமாக ஈடுபட்டு உள்ளது. யுரேனியத்துக்குச் செறிவூட்டும் திட்டத்தை கைவிடச் செய்ய நாங்கள் ஐரோப்பிய தோழர்களுடன் சேர்ந்து முயற்சி மேற்கொண்டுள்ளோம். ஈரான் மக்கள் சுதந்திரத்துக்காக தவிக்கிறார்கள். அவர்களுக்குப் பக்கபலமாக அமெரிக்கா நிற்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அணு ஆயுதம் தயாரிக்கும் திட்டத்தை வடகொரியாவை கைவிடச செய்ய நாங்கள் பாடுபட்டு வருகிறோம. ஈராக்கில் இருந்து இராணுவத்தை திரும்பப் பெறுவதற்கு செயற்கையாக கால அட்டவணை எதையும் நாங்கள் தயாரிக்கவில்லை. அப்படி ஒரு அட்டவணையைத் தயாரித்தால், அது தீவிரவாதிகளுக்கு துணிச்சலைக் கொடுத்துவிடும்.

ஈராக் மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளத் தயாராகும் வரை, அமெரிக்க இராணுவம ஈராக்கைவிட்டு வெளியேறாது. ஈராக மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்காக நாங்கள் பாடுபடுகிறோம். ஈராக் சுதந்திரமாக இருக்கும் வரை அமெரிக்கர்கள் பாதுகாப்பாக இருக்க முடியும.

இஸ்ரேலும், பாலஸ்தீனமும் அருகருகே அமைதியுடன் இரு தனி நாடுகளாக இருக்கவேண்டும் என்பது தான் எங்கள் இலட்சியம். இந்த இலட்சியம் விரைவில் எட்டப்படும்.

பாலஸ்தீனியர்களின் பொருளாதார பாதுகாப்புக்கு உதவ ஆயிரத்து 750கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அதற்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கவேண்டும் என புஷ் தனதுரையில் மேலும் குறிப்பிட்டார். (ற)

# பசுபிக் தீவுகளில் நிலநடுக்கம் 'சுனாமி' பீதியில் மக்கள்

பசிபிக் கடலில் அமைந்துள்ள குவாம் மற்றும் வடக்கு மரியானா தீவுகளில் நேற்றுமுன்தினம் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து, சுனாமி தாக்கக்கூடும் என்று அப்பகுதி மக்கள் பெரும் பீதி அடைந்தனர். சுனாமி அபாயம் இல்லை என உள்ளூர் மற்றும் வெளியூர் செய்தி நிறுவனங்கள் தொடர்ந்து உறுதியளித்த போதும் பெரும்பாலான மக்கள் கடலில் ஏதேனும் மாற்றம் தெரிகிறதா என்று பார்த்தவாறு இருந்தனர்.

ரிக்டர் கருவியில் 6.3 என பதிவான நிலநடுக்கத்தால் எந்தப் பாதிப்பும் ஏற்பட்டதாக தகவல் இல்லை. நிலநடுக்கத்தின் அளவு ரிக்டர் கருவியில் 7 புள்ளிகளாக பதிவானால்தான் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படும் என்று வடக்கு மரியானாவில் உள்ள நெருக்கடி நிலை நிர்வாக அலுவலகத்தின் தலைவர் கூறினார்.

குவாம் தீவைச் சுற்றி மலைகள் அமைந்துள்ளதால் சுனாமி ஏற்படும் வாய்ப்பு இல்லை என்று உள்நாட்டுப் பாதுகாப்பு அதிகாரி தெரிவித்தார். (ற)

# 1000 ஆண்டுகள் பழமைவாய்ந்த நகரம் மலேஷியாவில் கண்டுபிடிப்பு

(கோலாலம்பூர்)

மலேசியாவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நகரமொன்று புதைபொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவின் தென்பகுதியில் ஜோஹர் மாநிலத்தில் காட்டுப் பகுதியல் இந்நகரத்தைக் கண்டு பிடித்ததாக புதைபொருள் ஆராய்ச்சியாளர் ரைமி செ-ராஸ் கூறியுள்ளார்.

அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நகரம் 7வது நூற்றாண்டில் இருந்து 13வது நூற்றாண்டுவரை மலேசியாவை ஆண்ட ஸ்ரீவிஜய மலாய பேரரசின் முதல் தலைநகரான கோட்டா கோலாங்கியாக இருக்கக்கூடும்.

காட்டுப்பகுதியில் குறிப்பிட்ட ஓரிடம் மற்ற இடங்களில் இருந்து மாறுபட்டிருந்தது. அந்த இடத்தில் தோண்டிப் பார்த்ததில் பழங்கால நகரமொன்றைச் சுற்றி அமைக்கப்படும் அகழிகளும் உயரமான மேடுகளும் தென்பட்டன. மலேசியாவின் தொல்பொருளதுறை இப்பகுதியில் தொடர்ந்தும் ஆராய்ச்சியினை மேற்கொண்டுள்ளது. (ற)

## பாக்.சிறைகளில்

# 35 ஆண்டுகளாக வாடும் 182 இந்தியர்கள்

(இஸ்லாமாபாத்)

கடந்த 35 ஆண்டுகளாக எந்த வழக்கும் பதிவு செய்யப்படாமல் ஐந்து பெண்கள் உட்பட 182 இந்தியர்கள் பாகிஸ்தான் சிறைகளில் வாடிவருகின்றனர்.

இவர்களில் பலர் தற்போது தங்கள் சுயநினைவை இழந்துள்ளனர். இது தொடர்பாக பாக். அதிகாரிகள் தெரிவித்ததாக வெளியான செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது,

பாக். எல்லைக்குள் தவறுதலாக நுழைந்த ஐந்து பெண்கள் உட்பட 182 இந்தியர்கள் கடந்த 35 ஆண்டுகளாக இங்குள்ள சிறையில் வாடிக கொண்டிருக்கின்றனர். இவர்களில் 30பேர் முஸ்லிம்கள். மற்றவர்கள் இந்து, கிறிஸ்தவ மற்றும் சீக்கிய மதத்தைச் சேர்ந்தவர்கள்.

கைது செய்தவர்களை பாக் நிர்வாகம் இதுவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தவில்லை. அவர்கள் மீது குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யவில்லை. இவர்கள் எந்த சட்டப்பிரிவின கீழ் கைதுசெய்யப்பட்டு இருககின்றனர், இவர்களை விடுவிக்க பாக். அரசு இந்திய அரசுடன் ஒப்பநதம் ஏதும் செய்துகொண்டதா, பேச்சு நடத்தியதா எனபதும் தெரியவிலலை.

பாகிஸ்தானில் எந்த சிறையில் இவர்கள் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர், அவர்கள் இந்தியாவில எந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்கிற விபரமும் எங்களுக்குத் தெரியாது. கைது செய்யப்பட்டவாகளிடமே முகவரி போன்ற விபரங்களைக் கேட்டுத் தெரிந்துகொளளலாம் என்றால் அவர்களில் பலர் தஙகளது ஞாபகசக்தியை இழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஆனால் இந்தியத் தூதரகத்திடம் 50 இந்தியர்கள் மட்டுமே தஙகள் நாட்டுச் சிறைகளில் உள்ளதாக பாகிஸ்தான் அரசு தெரிவித்துள்ளது. இந்திய அரசும் தங்கள் நாட்டவர்கள 54பேர் பாக். சிறைகளில் வாடுவதாகக் கூறி அவர்களின் பட்டியலை பாக. அரசிடம் அளித்தது. அந்தப் பட்டியலில் உள்ளவர்களைக் கண்டுபிடிக்க பாக்அரசு முயன்றுவருகிறது. இன்னும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பாகிஸ்தான சிறைகளில் அதிகாரிகள் தீவிர சோதனை மேற்கொண்டதில் 182 இந்தியர்கள் சிறைகளில் வாடிக்கொண்டிருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். அதன் பின்னரே இந்தியர்கள் இத்தனை பேர் சிறைகளில் வாடிக் கொண்டிருப்பது எங்களுக்குத் தெரிய வந்தது. இவ்வாறு அந்தச் செய்தியில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற)

# பீகார், அரியானா, ஜார்கண்ட் மாநிலங்களில் வியாழனன்று முதற்கட்ட வாக்குப் பதிவு

## வன்முறைகளில் 19 பேர் பலி

(புதுடில்லி)

பீகார் மாநிலத்தில் மொத்தம் 243 சட்டசபை தொகுதிகள் உள்ளன. இங்கு இம்மாதம் 3,15,23 ஆம் திகதிகளில் மூன்று கட்டமாக தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்திருந்தது.

இதன்படி பீகார் மாநிலத்தில் உள்ள 64 தொகுதிகளில் முதல் கட்ட வாக்குப்பதிவு நேற்று முன் தினம் காலை 8 மணிக்கு தொடங்கியது. இந்தத் தொகுதிகளில் 1 கோடியே 42 இலட்சம் வாக்காளர்கள் உள்ளனர். 826 வேட்பாளர்கள் களத்தில் நிற்கிறார்கள். இதற்காக அங்கு 13 ஆயிரத்து 868 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 19 ஆயிரத்து 122 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வன்முறைக்களமாக காட்சி அளிக்கும் பீகார் மாநிலத்தில் தேர்தலையொட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உள்ளூர் பொலிஸாருடன் இணைந்து மத்திய துணை இராணுவ வீரர்களும் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். வாக்குச்சாவடிகளை கைப்பற்றினாலோ, தேர்தலை சீர்குலைத்தாலோ கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தும் 6 மாவட்டங்களில் தேர்தலைப் புறக்கணிக்கும்படி அவர்கள அழைப்பு விடுத்திருந்தனர்.

இதையும் மீறி பொதுமக்கள் ஆர்வமுடன் வாக்களித்தனர். நிறைய வாக்குச்சாவடிகளில் ஆண்களும், பெண்களும காலை முதலே நீண்ட வரிசையில் நின்று வாக்குப் போட்டதைக் காணமுடிந்தது.

பலத்த பாதுகாப்புக்கு இடையே பீகார் மாநிலத்தில் சில இடங்களில் வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்தன.

கயா மாவட்டத்தில் இமாம் கஞ்ச் தொகுதிக்கு உட்பட்ட சங்கர் பூர் கிராமத்தில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் மாவோயிஸ்ட் நக்சலைட்டுகள் நுழைந்து துப்பாக்கியால் சுட்டனர். இதில் 2 பொலிஸ் காரர்களும் ஒரு பெண் வாக்காளரும பலியானர்கள். பொலிஸ்காரர்களிடம் இருந்த துப்பாக்கிகளையும் தீவிரவாதிகள் பறித்துச் சென்றனர்.

ரோதாஸ் மாவட்டம் செனாரி சட்டசபை தொகுதியில் ராஷ்டிரீய ஜனதாதள தொண்டர்களுக்கும், ஐக்கிய ஜனதாதள தொண்டர்களுக்கும இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. அப்போது பொலிஸார் சுட்டதில் இரு பெண்கள் பலியானார்கள். சத்யதேவ் யாதவ் என்பவர் படுகாயம் அடைந்தார். அவர் சிகிச்சைககாக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.



தினாரா சட்டசபை தொகுதியில் உள்ள ஒரு வாக்குச்சாவடியில் சமூக விரோதிகளை எதிர்த்த ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஜெகனாபாத் மாவட்டம் கோசி சட்டசபை தொகுதியில் ஒரு வாக்குச்சாவடியில் தீவிரவாதிகள் தாக்கினார்கள். அப்போது அவர்கள் துப்பாக்கியால் சுட்டதில் ஒருவர் பலியானார்.

கோசி சட்டசபை தொகுதியில் உள்ள அகானா வாக்குச்சாவடியில் ராஷ்டிரீய ஜனதாதள் வேட்பாளர் அஜய்சிங் துன்னு, சுயேட்சை வேட்பாளர் ஜெகதீஷ் சர்மா ஆகியோரின் ஆதரவாளர்களுக்கு இடையே மோதல் வெடித்தது. இதனால் இரு தரப்பினரும் துப்பாக்கியால் சுட்டனர். இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

நவாடா தொகுதிக்கு உட்பட்ட சில வாக்குச்சாவடிகளில் கல்வீச்சு சமபவங்கள் நடந்தன.

நவாடா, ரஜவ்லி, ஹிசுவா வார் சாலிகஞ்ச், கோவிந்த்பூர் ஆகிய இடங்களில் அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் 12 வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றினார்கள்.

கயா நகரில் ஐக்கியஜனதாதள முன்னாள் 'எம்.பி' அருண் குமாரை பொலிஸார் கைது செய்தனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர் கைது செய்யப்பட்டு இருப்பதாகவும், வாக்குப்பதிவு முடிந்ததும அவர் விடுதலை செய்யப்படுவார். என்றும் பொலிஸ் டி.ஜி.ஜி சுனில்குமார் தெரிவித்தார்.

முதல்கட்ட வாக்குப்பதிவு பற்றி பீகார் உள்துறை கமிஷனர் கிரிஷ் சங்கர் கூறுகையில், 'ஒருசில இடங்களில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தவிர பீகாரில் வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்றது' என்று தெரிவித்தார்.

பீகாரில் 55 சதவீத வாக்குகள் பதிவாகியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த வாக்குப் பதிவின்போது பீகார் மாநிலத்தில் 7 பேர் பலியானார்கள்.

ஜார்கண்ட் மாநிலத்தில் கண்ணி வெடித்தாக்குதல் சம்பவத்தில் 6 பொலிஸார் உட்பட 7 பேர்களும் இன்னொரு சம்பவத்தில் 4 நக்சலைட்டுகளும் இறந்தனர். அரியானாவில் ஒருவர் பலியானார்.

பீகார், ஜார்கண்ட், அரியானா ஆகிய மாநிலங்களில் தேர்தல் வன்முறைக்கு மொத்தம் 19 பேர் பலியாகி உள்ளனர். (ற)


# தங்கப் பத்திரிகை

(பீஜிங்)

சீனாவில் தங்கத்தினால் தயாரான செய்தித்தாள் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

500 கிராம் தங்கத்தில் ஒரு பதிப்பும், 200 கிராம் தங்கத்தில் ஒரு பதிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. முதல் பதிப்பின் விலை சுமார் ரூபா3 இலட்சத்து 65 ஆயிரத்து 200ஆகும. இரண்டாவது பதிப்பின் விலை ரூபா 1 இலட்சத்து 54 ஆயிரம். தென் சீனாவில் வர்த்தக நகரான ஷென் ஜென் நகரில் இது வெளியிடப்பட்டுள்ளதாக அரசு செய்தி ஸதாபனம் கடந்த வியாழக்கிழமை கூறியுள்ளது.

இது ஒரே ஒருமுறை மட்டுமே வெளியிடப்படக்கூடியதாகும். சீன நாடாளுமன்றத்தின் கடந்த 10 கூட்டத தொடரின் சாதனைகளின் நினைவாக இந்தத் தங்கப் பத்திரிகை வெளியிடப்பட்டிருக்கிறது. இதில் எத்தனை பக்கங்கள் இருக்கின்றன என்பது தெரிவிக்கப்படவில்லை. (ற)




அமெரிக்காவில் ஹவாய் தீவில் உள்ள கிலாய் எரிமலை தீக்குழம்புகளை உமிழ்ந்து வருகிறது. எரிமலையிலிருந்து ஓடிவரும் தீக்குழம்பு பசுபிக் கடலில் கலந்து வருகிறது.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால்
# வடமராட்சி கிழக்குப் பகுதியில் தற்காலிக வீடுகள் அமைப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுனாமியால் பாதிப்படைந்த மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணியினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் ஆரம்பித்துள்ளனர்.

மாமுனை,செம்பியன்பற்று, தாளையடி, உடுத்துறை, வத்திராயன், மருதங்கேணி, கட்டைக்காடு மற்றும் வெற்றிலைக்கேணி பகுதிகளில் உள்ள மக்களுக்கே கடலிலிருந்து 400 மீறறருக்கு அப்பால் இந்தவடுகள் அமைக்கும் பணி இடம்பெற்றுவருகிறது.

அடுத்த கட்டமாக இந்த மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிரந்தர வீடுகளை நிர்மாணப்பணிகள் தற்காலிக வீடுகளில் மக்கள் குடியமர்த்தப்பட்டதன் பின்னரே ஆரம்பிக்கப்படவுள்ளன. (ந-43)

# அரச ஊடகங்களின் குற்றச்சாட்டுகளை கண்டித்து ஐ.தே.க ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

அரச ஊடகங்கள் ஐ.தே.க. மீது சுமத்துகின்ற குற்றச்சாட்டுக்களினால் மக்களுக்காக மேற்கொள்ளப்படும் சேவைகளை நிறுத்த முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கருஜயசூரிய ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் சகல கட்சிகளினாலும் விளக்கேற்றி ஒற்றுமை ஏற்படுத்தியமை அரச ஊடகங்களில் சித்தரித்துக்காட்டும் தவறான செய்திகளினால் இந்த ஒற்றுமையை மறக்கச் செய்திருப்பதாக அவர் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துக்கு பங்கம் விளைவிக்கும் செய்திகளை வெளியிடுவதால் அரச ஊடகங்களை நம்ப முடியாது இருக்கிறது.

கடலிலிருந்து நூறு மீற்றருக்கு கட்டடங்களை அமைப்பதற்கு அரசாங்கம் தடை செய்துள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ள கருஜயசூரிய , நிவாரணங்கள் வழங்கும் சர்வதேச நாடுகளிடம் உதவி வழங்க வேண்டாம் என தமது கட்சி வலியுறுத்தி வருவதாக அரச ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருப்பதாகவும் அக கடிததில் குறிப்பிட்டுள்ளார். (ச)

# கடலுக்கு அண்மையில் வசிப்போருக்கு அரச காணிகளில் இலவசமாக வீடு
## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

கடற்கரை மட்டத்திலிருந்து 100 மீற்றர் தூரத்திற்குள் புதிய கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

எனினும் அழிவுற்ற கிராமம் அமைந்திருந்த பிரதேசத்திற்கு அண்மையிலுள்ள அரச காணிகள் இனங்காணப்பட்டு 100 மீற்றர் தூரத்திற்குள் வதிவிடத்தை கொண்டிருந்த அனைத்து வீட்டு உரிமையாளர்களுக்கும் அரச நிதியிலிருந்து வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படும் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அவர்களுக்கான காணியும் வீடும் முற்றாக இலவசமாக வழங்கப்படும். 100 மீற்றர் தூரத்திற்குள் சொந்தமாக வீடுகளை நிர்மாணித்தோரினது காணிகள் அவர்களுக்கே உரித்தானது.

அக்காணிகளை அரச சுவீகரிக்க மாட்டாது. உரிமையாளர்கள தமது தேவைக்கு ஏற்ப அக்காணியை பயன்படுத்தலாம் ஆனால் கட்டிடங்களை அமைக்க முடியாது என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

அக்காணிகளில் தென்னை மற்றும் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வதற்கு அரசு உதவிகளை மேற்கொள்ளுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலவசமாக வழங்கப்படும் வீடுகள் 500 சதுர அடி பரப்பளவினை கொண்டதாக இருப்பதுடன் குடிநீர், வடிகால்வசதி, மின்சாரம் போன்ற பொதுவசதிகள் இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

இதேவேளை 100 மீற்றருக்கு அப்பால் வீடுகளை அமைந்திருந்த வீட்டு உரிமையாளர்களுக்கு அவர்களின் காணிகளிலேயே வீடுகள் நிர்மாணிப்பதற்கு மீள அறவிடப்படாத குறிப்பிட்டதொகைப் பணம் அரசினால் வழங்கப்படவுள்ளது என ஜனாதிபதி செயலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச)


# தமிழ் - முஸ்லிம் ஊடகவியலாளர்கள் அரசாங்கத்தினால் புறக்கணிப்பு

(திருநெல்வேலி)

வடக்கு கிழக்குப் பகுதியில் சுனாமியால் பாதிப்படைந்த தமிழ் - முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு ஊடகத்துறை அமைச்சு உடனடியாக உதவிக்கரம் நீட்ட வேண்டும் என யாழ். மாவட்ட ஊடகவியலாளர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.



தென்பகுதியில் உள்ள சிங்கள ஊடகவியலாளர்களுக்கு உதவி வரும் அரசாங்கம் தமிழ் - முஸ்லிம் ஊடகவியலாளர்களைப் புறக்கணித்துள்ளதாகவும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நடுநிலையுடன் செயற்படும் ஊடகத்துறைக்கே அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதாகவும் இச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-43)






**இலங்கையின் 57வது சுதந்திர தினம் யாழ். குடாநாட்டில் கரி நாளாக அனுஷ்டிக்கப்பட்டாலும் இராணுவ முகாம்களிலும் அரச திணைக் களங்கள் சிலவற்றிலும் சுதந்திர தினம் சிங்கக் கொடி ஏற்றி எளிமையான முறையில் கொண்டாடப் பட்டது.**

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர் - குறள்

வலம்புரி

# யாரிடம் இருந்து தப்பிக்கொள்ள பாதுகாப்பு ஒப்பந்தம்!

பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாகிஸ்தானுக்கு செல்லவுள்ளார்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வதற்கு இலங்கை அரசு மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்து போக பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ளும் புதிய திட்டத்தை இலங்கை அரசு தீட்டியுள்ளது.

இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்வதில் இந்திய மத்திய அரசுக்கு விருப்பம் இருந்த போதிலும், மத்திய அரசுக்கு ஆதரவு வழங்கிவரும் திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

அதிலும் குறிப்பாக, மறுமலர்ச்சித் திராவிடமுன்னேற்றக்கழகத்தின் பொதுச்செயலாளர் வை.கோபாலசாமி மத்திய அரசின் முக்கிய தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்தே இந்திய-இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் தடைப்பட்டுப் போனது. இத்தகவலை வை.கோபாலசாமியே பகிரங்கப்படுத்தியிருந்தார்.

இவ்வாறு பாதுகாப்பு ஒப்பந்தம் தடைப்பட்டுப் போனதால், அவமானப்பட்டுக் கொண்ட இலங்கை அரசு, இந்தியாவுக்கு பாடம் புகட்ட பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள முற்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை எதிர்க்க வேண்டும்மென்ற ஒரேகாரணத்திற்காக இலங்கை அரசுக்கு ஆயுத உதவி, இராணுவப்பயிற்சி, தகவல் பரிமாற்றம் என பல்வேறுவழிகளில் உதவிசெய்து வந்த இந்தியாவை, இலங்கை அரசு ஒருகணப்பொழுதில் தூக்கிஎறிந்து விட்டது.

தாய்- பிள்ளை உறவோடு தொடர்புபட்ட ஈழத் தமிழர்கள் படும் இன்னல்களைக் கண்டும் காணாமல் இருந்த இந்தியா நீதியற்ற முறையில் இலங்கை அரசுக்கு உதவிவந்தது.

இந்துமா சமுத்திரத்தில் அமெரிக்க வல்லாதிக்கத்தை ஏற்படுத்துவதற்கு துணைபுரிந்து வரும் இலங்கைக்கு இந்தியா இராணுவரீதியில் உதவி செய்ததெனில் அதுஅந்த நாட்டின் தெளிவற்ற அரசியல் இராஜதந்திரத்தையே வெளிப்படுத்துவதாக அமையும்.

இலங்கை என்ற சிறிய நாடு தனது பாதுகாப்பை தானே உறுதிசெய்து கொள்ள முடியும். இலங்கையைப் பொறுத்தவரை வெளிநாடுகளின் அச்சுறுத்தல்கள் எதுவுமே கிடையாது.

இவ்வாறு எந்தவித வெளிநாட்டு அச்சுறுத்தல்களும் இல்லாத இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ள அவசரப்பட்டுக் கொள்வது எதற்காக என்ற கேள்வியை முதலில் இந்தியாவே எழுப்பியிருக்க வேண்டும்.

அத்தகையதொரு கேள்வியை இந்தியா எழுப்பியிருக்குமாக இருந்தால் பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளும் விரும்பத்தகாத நிகழ்வு நடைபெறாமல் தடுக்கப்பட்டிருக்கும்.

எனினும் சுயநல நோக்கில் இலங்கையுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு இந்தியா சம்மதம் தெரிவித்ததன் காரணமாகவே இன்று பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யும் களநிலையை ஏற்படுத்தியுள்ளது.

எதுவாயினும் ஒரு புறத்தில் சமாதானம் எனக் கூறிக்கொள்ளும் இலங்கை அரசு- மறுபுறத்தில் விடுதலைப்புலிகளை நசுக்குவதற்காக, பயங்கரவாத நாடுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொள்வதில் நாட்டம் காட்டிவருகிறது.

சுருங்கக் கூறின் இந்தநாட்டின் சொந்தக்காரர்களான தமிழ்மக்களை அழித்தொழிப்பதற்காகவே 'பாதுகாப்பு' என்ற பேரில் ஜனாதிபதியும் அரசும் பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் செய்துகொள்கின்றன என்பது அவசரமாக புரிந்துகொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

# சொந்த மண்ணில் நிம்மதியாக வாழ அனுமதிக்காவிடின் பிறப்புரிமையை வென்றெடுப்பதை விட வேறு வழியில்லை

## நிலைப்பாட்டை விளக்கி வலி – வடக்கு மக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

(திருநெல்வேலி)

***இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் தமிழ்ப்பிரதேசங்கள் முடக்கப்பட்டுள்ளதுடன், அப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை இதுவரை மீளக்குடியேறவும் அனுமதி வழங்கப்படவில்லை.***

***இந்நிலைமை தொடர்ந்தும் நீடிக்காமல் வலிகாமம் பகுதி மக்கள் தத்தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிடின் பிறப் புரிமையை வென்றெடுக்க வெகுவிரைவில் நாம் வழியைத் தேடுவது தவிர்க்க முடியாததாகிவிடும் எனக் குறிப்பிட்டு யாழ். மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.***

நேற்று காலை தெல்லிப்பழை பிரதேச செயலர் ஊடாக ஜனாதிபதிக்கு இந்த மகஜர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

"பெப்ரவரி 4 அடிமைத்தினம்" எனும் தலைப்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேற்படி மகஜரின் விபரம் வருமாறு,

ஈழத் தமிழ் மக்கள் மீது பேரினவாத ஆட்சியாளர்கள் 1948ஆம் ஆண்டில் இருந்து கட்டவிழ்த்துவிட்ட ஒடுக்குமுறையின உச்சக்கட்டமாக கடந்த இரு தசாப்தங்களாக வலிகாமம் வடக்கு மக்களுக்கு சொந்த மண்ணில் வாழும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டில் மிகப்பெரிய மனித உரிமை மீறல்களில் இதுவும் ஒன்றாகும்.

வலி- வடக்கில் மட்டும் சுமார் ஒரு இலட்சம் மக்கள் வாழ்ந்த பிரதேசம் உயர் பாதுகாபபு வலயம் என்ற இரும்புத் திரையால் மூடப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் இதுபோன்ற உயர்பாதுகாப்பு வலயங்கள் பலப்பலவாகும். புலம்பெயர்ந்து நாம் பட்டுவரும் அவலங்கள் பற்றித் தங்களுக்கு பலமுறை அனுப்பி வந்த மகஜர்கள், தங்கள் கவனத்தை ஈர்ப்பதற்கென செய்த போராட்டங்கள் எதனையும் தாங்கள் கவனம் எடுத்ததாகத் தெரியவில்லை.

வீடுகளை இழந்து, தொழில்களை இழந்து 10,12 அடி சதுர முகாம்களில் நடைபபிணங்களாக வாழும் எம்மவர் நிலைமை தங்களுக்கு எப்படித் தெரியப்போகிறது? உங்கள் வீட்டு நாய்களுக்கு நீங்கள் கொடுக்கும் மதிப்புக்கூட இந்த மண்ணில் எமக்கு இல்லை.

எமது குடும்பங்கள் நாளுக்கு நாள் எமது கண் முன்னே அழிந்து கொண்டு போவதை பேய்கள் கண்டால் கூட இரக்கம் கொள்ளும். தாங்களும் பிள்ளைகளைப்பெற்று வளர்க்கும் ஒரு தாய் என்பதால் எமது உணர்வுகளைக் கூறுகின்றோம். தாஙகள் தங்கள் பிள்ளைகளை எவ்வாறு வளர்கின்றீகள் என்பது எமக்குத்தெரியும். ஆனால் எங்களது பிள்ளைகளை நடைப்பிணங்களாக அலைய விட்டு நீங்கள் மகிழ்ச்சியடைகின்றீர்கள்.

சுனாமியால் வட-கிழக்கில் அழிக்கப்பட்ட குடிசைகளில் சுமார் 1500க்கு மேற்பட்டவை வலிகாமம் வடக்கிலிருந்து புலம் பெயர்ந்து கடற்கரையோரங்களில் வாழ்ந்த மீனவ மக்களுடையவை என்பதும் தங்களுக்குத் தெரிந்திருக்காது. அக் குடும்பங்கள் இழந்த உயிர்கள் உடைமைகளைத் தனிக் கணககு எழுதியும் வைத்திருக்கமாட்டீர்கள். விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக அம்மக்கள் இன்று துன்பத்தைச் சுமக்கிறாாகள்.

எனவே சுதந்திரதினம் என்று தாங்களும் தங்கள் இனமும் கொண்டாடிக் குதூகலிக்கும் இன்றைய நாள் எம்மைப் பொறுத்தவரை எமது இனத்துக்கு மரண ஓலை எழுதப்பட்ட கரிநாளாகும்.

மாற்று இடங்களில் குடியேறும் படி எம்மை இன்று கேட்க முற்படுகின்றீர்கள் தங்களை வேற்று நாட்டிற்குச் சென்று ஜனாதிபதியாக இருங்கள் என்று நாம் கேட்பதற்கு ஒப்பான சித்தாந்தம் இதுவாகும்.

எம்மை சொந்த மண்ணில் வாழ விடுங்கள் அல்லாவிடின், எங்கள் பிறப்புரிமையை வென்றெடுகக வெகுவிரைவில் நாம் வழியைத் தேடுவது தவிர்க்க முடியாததாகும் என அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-43)

## முல்லைத்தீவின் மீள்கட்டுமானப் பணிகளுக்கென

# வன்னி மாவட்டப் புனர்வாழ்வு அமைச்சு அரச அதிபரிடம் வாகனங்கள் கையளிப்பு

(வவுனியா)

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவடடத்தில் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவென வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்கள் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மேரி இமெல்டா சுகுமாரிடம் கையளிக்கப்பட்டன.

வவுனியா செயலகத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் இரண்டு புல்டோசர்கள், ஐந்து ரிப்பர்கள், 1பெக்சோ இயந்திரம் என்பன கையளிக்கப்பட்டன.

அத்துடன், வன்னி புனர்வாழ்வு அமைச்சின் நிதியிலிருந்து 50 இலட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்களையும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்திடம் கையளித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலைகளினால் சுமார் 3 ஆயிரத்து 360 குடும்பங்கள் தமது தொழில் உபகரணங்களை இழந்து பெரும் பாதிப்படைந்த நிலையில் உள்ளனர். (ந-8)

# பாதிக்கப்பட்ட ஏனைய ஆசிய நாடுகளை விட இலங்கையில் அபிவிருத்திப் பணிகள் துரிதம்

## ஐ.நா வின் உலக உல்லாசப் பயணத்துறை சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏனைய ஆசிய நாடுகளை விட இலங்கையில் மீள் அபிவிருத்தி நடவடிக்கைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்று ஐ.நா வின் உலக உல்லாசப் பயணத்துறை ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கையன மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இரண்டு சதவீதம் உல்லாசப் பயணத்துறை மூலம் பெறப்படுகிறது.

கடந்த டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற 'சுனாமி' ஆழிப்பேரலை காரணமாக இலங்கையில் சுமார் 100றகும் அதிகமான உணவு விடுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் அழிந்து போயும் உள்ளன.

இலங்கையில் ஏறக்குறைய 40 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 13 நாடுகளில் மொத்தமாக 3 இலட்சம் பேர் தங்கள் உயிர்களை சுனாமிக்குப் பறிகொடுத்தனர்.

ஐக்கிய நாடுகளின் உலக உல்லாசப் பயணத்துறையின் பிரதம செயலாளர் பிரான்சிஸ்கோ ∴பன்ஜாலி நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்து வெளியிடுகையில்,

அனர்த்தம் இடம்பெற்று ஐந்து வாரங்களுக்குள் இங்கு புனர் நிர்மாணப் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பாராட்டினார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட தாய்லாந்து, இலங்கை, இந்தோனேஷியா, மாலைதீவு என்பவற்றிற்கு உல்லாசப் பயணிகள் தொடர்ந்தும் விஜயம் செய்ய வேண்டும் என்ற உலகளாவிய பிரசார நடவடிக்கைகளை இந்த ஸ்தாபனம் மேற்கொண்டுவருகின்றது. (ந)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

உலகங்கள் வரும், போகும். அதனால் என்ன? ஆன்மா வாழ்கிறது. விரிவடைந்து கொண்டே இருக்கிறது. உலகங்கள் ஆன்மாவிற்குள் நுழைந்தாக வேண்டும். கடலில் நீர்த்துளிகள் மறைவது போன்று அவை அங்கே மறைந்தாகவும் வேண்டும். அந்த உலகமா ஆன்மாவின் லட்சியமாக இருப்பது?

சுவாமி விவேகானந்தர்

# மல்லாவி மத்திய கல்லூரி மாணவிக்கு யாழ். பல்கலையில் அனுமதிமறுப்பு

(கிளிநொச்சி)

மல்லாவி மத்திய கல்லூரியில் கல்வி கற்று யாழ்.பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவி ஒருவருக்கு பல்கலைக் கழக அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

துணுக்காய் வலயக்கல்வி திணைக் களத்தின் கீழ் உள்ள மல்லாவி மத்திய கல்லூரியில் கலைப்பிரிவில் கல்வி கற்ற மாணவி ஒருவர் இந்து சமயம், தமிழ், கர்நாடக சங்கீதம் ஆகிய பாடங்களில் முறையே ஏ, பி, சி தரப்பெறுபேறுகளுடன் பெற்று சற்ஸ்கோர் புள்ளித்திட்டத்தின் கீழ் 1.380 புள்ளி பெற்று, மாவட்ட மட்டத்தில் 21வது நிலையில் யாழ் பல்கலைக் கழகத்திற்கு தெரிவானார், அங்கு பதிவுகளை மேற்கொள்ளச் சென்றபோது பல்கலைக் கழக அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பு பல் கலைக கழக மானியங்கள் ஆணைக் குழுவிடம் தொடர்பு கொண்டபோது குறிப்பிட்ட மாணவி 2 கலைப்பாடங்களில் தோற்றியதன் காரணமாக இவரது பல்கலைக்கழக அனு மதிமறுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளது டன், உயர்தர வகுப்பு பாடங்கள் தொடர் பான சுற்று நிருபங்கள் வலயக்கல்வித் திணைக்களங்கள் பாடசாலைகள் என் பவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அனுமதி மறுக்கப்பட்ட மாணவி தொடர்பான விபரங்களை துணுக்காய் வலயக்கல்விப்பணிப்பாளர் சம்பந்தப்பட்ட கல்லூரி அதிபரிடம் கோரியுள்ளார். (ச)

## கருணா...

சிங்களவரான இவரிடமிருந்து ரி-56 துப் பாக்கிக்குரிய 750 ரவைகள் கொண்ட பெட்டியொன்றும், 5.0 விமான சுடுகலனுக் கான 80 ரவைகள் கொண்ட பெட்டியொன் றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக வெலிக்கந்தை பொலிசார் தெரிவித்தனர். வெலிக்கந்தை பிரதேசத்திலுள்ள இராணுவ முகாமில் பணிபுரியும் இராணுவ சிப்பாய் ஒருவரே தன்னிடம் இதனை கொடுத்ததாக விசா ரணைகளின்போது இந் நபர் தெரிவித்துள் ளார். இதனையடுத்து இராணுவ பொலிசாரி னால் கைதுசெய்யப்பட்ட இராணுவ சிப் பாய் ஒருவர் விசாரணையின் பின்னர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## தமிழர்...

சுதந்திர நாள் கொண்டாட்டத்திற்கு எதிர்ப் புத் தெரிவிக்கும் வகையில் வீதிகள் எங் கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட் டிருந்தன.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் வர்த்தக நிலையங்கள் பொது கட்டடங்கள் எங்கும் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு துக்கநாள் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தின் வீதிகள் எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. மக்கள் தமது வழமையான செயற்பாடு களில் ஈடுபட்டனர். அவர்கள் தமது கட மையின் போது கறுப்புப் பட்டிகளை அணிந் திருந்தனர். (ச-08)

# சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று எளிமையாக நடைபெற்றன

(கொழும்பு)

இலங்கையின் 57வது சுதந்திர தினம் நேற்று கொழும்பில் சுதந்திர சதுக்கத்தில் எளிமையாக நடைபெற்றது.

சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இடம் பெற்ற இந்த வைபவத்தில் பிரதமர் உட்பட அரசியல் தலைவர்கள், முப்படை களையும் சேர்ந்த உயர் அதிகாரிகள் எனபலர் கலந்துகொண்டனர் நிகழ்வின் ஆரம்பத்தில் உயிரிழந்த படையின ருக்காகவும் சுனாமிப் பேரலைகளினால் உயிரி ழந்த மக்களுக்கும் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து முப்படைகளினதும் அணிவகுப்பு மரியாதை இடம் பெற்றது மரியாதை அணிவகுப்பை ஜனாதிபதி ஏற் றுக் கொண்டார்.

முப்படையினரும் பொலிஸாரும் நிகழ்த்திய மரியாதை அணிவகுப்பு அனை வரினதும் கவனத்தை ஈர்த்திருந்தது.

சுனாமிப் பேரலை இழப்புக்காரணமாக நேற்றைய சுதந்திரதின நிகழ்வில் மோட் டார் வாகன கண்காட்சி வைபவமும் ஏனைய கலாசார நிகழ்வுகளும் நடத்தப் படவில்லை. இதேவேளை கடற்படையின ரின் மரியாதை வேட்டுக்களை தீர்க்கும் நிகழ்வு கொழும்பு கலங்கரை விளக்கருகே இடம் பெற்றது.

இதன் போது கடற்படையினரால் 25 மரியாதை பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட் டன. இதேவேளை வடக்கு கிழக்கு பிர தேசங்களில் சுதந்திரதினம் துக்கநாளாக அனுஷ்டிக்கப்பட்டது இங்கு குறிப்பிடத் தக்கது. (ச-8)

# யாழ். சிறைச்சாலையிலிருந்து 39 கைதிகள் நேற்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

சுதந்திர தினத்தையொட்டி யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து 39 கைதிகள் நேற் றுக் காலை விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதியின் விசேட பணிப்புரையின் பேரில் நாடளாவிய ரீதியிலுள்ள சிறைச் சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறுசிறு குற்றச் செயல்களுடன் தொடர் புடைய 1800 கைதிகள் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த வகையில் கசிப்பு உற்பத்தி, கோஷ்டி மோதல் மற்றும் மதுபோதையில் மக்களுக்கு தொந்தரவு செய்தமை, மணல் கடத்தல், குற்றப்பணம் செலுத்தத் தவறி யமை போன்ற குற்றச்செயல்களின் பேரில் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோ ரில் 2 பெண்கள் உட்பட 39 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை யாழ்ப்பாணம் சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோரில் 3 பேர் சிறுசிறு குற்றச் செயல்களின் நிமித் தம் விடுதலைக்காக சிபார்சு செய்யப்பட்ட போதும் வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டிருப்பதால் இவர்கள் தொடர்ந் தும் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ளதாக சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். இந்திரகுமார் தெரிவித்தார். (ற)

# எமது நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு...

சுதந்திர நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி சந்திரி காகுமாரதுங்கா இதனைத் தெரிவித்துள் ளார். அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில்,

பாரிய அனர்த்தம் மிகவும் பயங்கர மானது தற்போதுள்ள மக்கள் தம் வாழ் நாளில் கண்டிராத ஒன்றாகவும் இருந்தது என்பது யாரும் மறுக்கமுடியாது. ஒரு மணி நேரத்தில் ஆயிரக்கணக்கானோர் தமது உயிரை இழந்துள்ளனர்.

ஆயிரக்கணக்கானோர் வீடுகளை இழந் தும் பெருமளவு கட்டடங்கள் கடல் நீரால் அடித்தும் செல்லப்பட்டுள்ளன. பல நூற் றுக்கணக்கான ஆண்டுகளாக நிர்மாணித்து பாதுகாத்து வந்த அனைத்து சொத்து உடைமைகளும் அழிக்கப்பட்டுள்ளன. இவ்வனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட சகலருக் கும் எனது அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பேரழிவினால் தனியாக ஒரு வழியில் மட்டும் பாதிக்கப்பட்ட எந்தவொரு இலங் கையரும் இல்லை குறுகிய காலத்தில் நாம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாடளாவிய ரீதியில் உதவியிருக்கிறோம். ஏழைகள், பணக்காரர்கள் போன்ற சகல பிரிவினரிடமி ருந்தும் உணவு, உடைகள், மருந்துகள் வேறுநிவாரணப் பொருட்களும் பெறப்பட் டுள்ளன. மக்களாலேயே கொண்டு செல்லப் பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

அனர்த்தம் இடம்பெற்று ஒரு மணி நேரத்திற்குள்ளேயே அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்திருந்தது. அன்றைய தினம் மாலையிலேயே நாம் யாழ்ப்பாணம், கிழக்கு, தெற்கு, மேற்குப்பிரதேசங்களுக்கு உணவுப்பொருட்களை அனுப்ப ஆரம்பித் திருந்தோம் என்றார். அனர்த்தம் இடம் பெற்று மூன்று நாட்களின் பின்னர், அழி வடைந்து போயுள்ள எம் நாட்டை அதன் உட்கட்டமைப்பை மீளக்கட்டியெழுப்ப வென விசேட படையொன்றை அரசாங்கம் அமைத்திருந்தது.

மூன்று வாரங்களுக்குள்ளாக ஒருதிட் டம் ஒன்றை நாட்டுக்கு வெளியிடக் கூடி யதாக இருந்தது. ஒருமாதத்திற்குள் புன ரைமைப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டிருந்தோம் 75 ஆயிரம் புதிய வீடுக ளை அமைக்கவேண்டியுள்ளது. 150 ஆயிரம் வீடுகள் திருத்தவேண்டியுள்ளது. 5 ஆயிரத்திற்கு குறைவான வீடுகளையும் 200 வர்த்தக நிலையங்களையும் முதலில் அமைக்க வேண்டியுள்ளது.

இப்பாரிய பணியை முன்னெடுப்பதற்கு தேவையான ஆன்மீக, மனிதவளங்கள் எமது நாட்டில் உள்ளன என நான் நம்பு கின்றேன். இந்நாட்டை கட்டியெழுப்புவ தற்கு எமது அரசாங்கம் உறுதிபூண்டுள் ளது என்பதை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். நாம் வெற்றிகாணுவோம் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இந்நோக் கத்திற்காக சகல அரசியல் கட்சிகளின் பங்களிப்பும் அவர்களது தலைமைத்துவ மும் எமக்கு அவசியம் தேவை.

நான் முன்னர் கூறியபடி இனங்களுக் கிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வும் அடைவதற்கு பரந்த உள்ளமும் தலை சிறந்த அரசியல் ஞானிகளும் எம்மை இந்த துன்பகரமானதும் வெகுமதி தரக் கூடியதுமான பாதையில் வழி நடாத்திச் செல்லவேண்டும். இலங்கையர்களாகிய எம்மிடம் இவ்வியல்புகள் உண்டு என நம்புகிறேன். இவற்றை நாட்டிற்கு தேவைப் படும் இத் தருணத்தில் வழங்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் எமக்கு உதவ உலகம் முன்வந்திருக் கிறது. எமது நாட்டை கட்டியெழுப்ப கிழக்கு, மேற்கு நாடுகள் பல கணிசமான உதவிகளை ஏற்கனவே வழங்கியுள்ளன. உலகம் முழுவதுமுள்ள நாடுகளின் ஒவ் வொரு சாதாரண குடிமக்களின் மனதை யும் எமது ஒற்றுமை மூலம் தொட்டிருக் கிறோம். இதன்மூலம் சுனாமி ஏற்படுத்திய அழிவிலிருந்து மீளும் பாரிய சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் துணிவை நாம் பெற்றுள்ளோம்.

மனிதாபிமானத்தையே இல்லாதொழிக் கும் நவீன உலகில் மீண்டும் எழுந்து வரமுடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. என் சார்பிலும் என் அரசாங்கத்தின் சார்பி லும் உலகம் முழுவதிலும் எமக்கு கிடைத்த ஒவ்வொரு அனுதாபத்திற்கும் ஒவ்வொரு ஊக்கத்திற்கும் சகலவிதமான உதவிகளுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

சுதந்திரமடைந்து பல தசாப்தங்களாக நாம் புரிந்துகொள்ளாதிருந்த ஒரு பாடத் தினை இயற்கை எமக்கு கற்றுத்தந்திருக் கிறது. இலங்கையை தாய்நாடாக கொண்டு வாழும் பல்லாயிரக் கணக்கான மக்கள், சிறு சிறு குழுக்களாவும் இன ரீதியாகவும் மொழி ரீதியாகவும் சமய ரீதியாகவும் பிரிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் உண்மையில் எம்மைப் பிரித் துள்ள கோடானது எம் நாட்டை சூழவுள்ள கடலால் உருவாக்கப்பட்ட இயற்கையான ஒரு கோடாகத்தான் இருக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள நாம் மறுத்திருந் தோம்.

ஆனால் கடந்த தசாப்தங்களாக நாம் பிளவுபட்டிருந்தது எம்மிடையேயான வேறு பாடுகளையும் கடல் அலை தற்போது கழுவிச் சென்றுள்ளது. கடலலையானது சிங்கள தமிழ், முஸ்லிம் என்றோ அல்லது பௌத்த இந்து இஸ்லாம், கிறிஸ்தவர் என்றோ பணக்காரர்கள், ஏழைகள் என்றோ இளையோர், முதியோர் என்றோ கருத வில்லை.

இந்த இயற்கையானது மனிதன் எந்த இடத்திலும் ஒருவருக்கொருவர் சமமான வன் என்றும் எமது தாய்நாடு தொடர்பாக எழும் சகல சவால்களையும் ஒன்றி ணைந்தே எதிர்கொள்ள வேண்டும் என்ப தையும் கற்றுத் தந்துள்ளது. எமக்கிடை யேயுள்ள முரண்பாடுகள், போர்களை விடுத்து ஒன்றிணைவது சிறந்ததென்பது இயற்கை கற்றுத் தந்த பாடம்.

சகல இலங்கையர்களுக்கும் நான் கூறுவது என்னவெனில் இப் பாரிய இயற் கையழிவின் பின்னராவது அர்ப்பணிப்புட னும் விசுவாசத்துடனும் செயற்படுவது மட்டுமன்றி எதிரி என ஒருவருக்கொருவர் கருதாமல் எமது சகல மன சிந்தனை களையும் செயற்பாடுகளையும் பாரியள வில் மாற்றிக்கொண்டு அனைவருமே நண் பர்களாக ஒற்றுமையாக எமது நாட்டை உண்மையான இலங்கை நாடாகவும் நவீன பயனுள்ள நாடாகவும் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயலாற்ற முன்வரவேண் டும் என்பதாகும் என ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்துள்ளார். (ச)

## பொலிசாருக்கு...

பொலிசாரால் உறுதியளித்த போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இத னைக் கண்டித்து ஊர்காவற்றுறை சந்தியி லிருந்து பொலிஸ் நிலையம்வரை ஆர்ப் பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கிராம அபிவிருத்திச் சபை ஏற்பாட்டில் நடை பெற்ற இப் போராட்டத்தில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டனர். போராட்டத் தில் ஈடுபட்டவர்கள் சுலோக அட்டைகள், கறுப்புக்கொடிகள் என்பனவற்றை தாங்கி யிருந்தனர். (ச-04)

## விடுதலைப்...

கிருஷ்ணன் வரதன் என்பவர் வாழைச் சேனைச் பொலிசாருக்குத் தெரிவித்துள் ளார்.

கருணா குழுவைச் சேர்ந்த ஒருவரே துப் பாக்கிப் பிரயோகம் செய்ததாக கூறிய அவர், அவரின் பெயர் விபரங்களையும் பொலிசாருக்குத் தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் குறித்து பொலிசார் விசா ரணைகளை மேற்கொண்டுள்ளார். (ச-4-8)

## மீளக்குடியமர்த்தக்...

இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செ. கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் மற்றும் சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப் போராட்டம் நடந்துகொண்டிருந்த போது அங்கு வந்த இராணுவத்தினர் போராட்டத்தில் தலைமை தாங்கிய சிவ மகராசாவை அழைத்துச் சென்று போராட் டத்தை கைவிடுமாறு கூறியதாக தெரிவிக் கப்படுகிறது. (ச-43-09)








## உடன் தேவை

☆ஓவ்செற் இயக்குநர்கள்

☆ஓவ்செற் - பயிலுநர்கள்

(யாழ் நகரமையத்திலிருந்து 8கி.மீ. தூரத்திற்குள் நிரந்தரவசிப்பிடத்தைக் கொண்ட ஆண்கள்.)

11-02-2005 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வருகை தரவும்

ஆளணி முகாமையாளர், வலம்புரி


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.